# சுவைத்திரள்

சுவை – 01 1994 ஏப்ரல் – மே. திரள் – 06




மீன்பாடும் தேன்நாட்டின் நகைச்சுவை, பல்சுவை ஏடு.

விலை 10/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் நூல்கள் தொடங்கிப் பல்கலைக்கழக மாணவர் வரை தரமான நூல்களுக்கும் அனைத்து உபகரணங்களுக்கும் வெள்ளவத்தையில் நாடவேண்டிய தேடவேண்டிய புத்தக நிலையம்

# இண்டர்மொட் புத்தகசாலை

240, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06.
ரெலிபோன்:- 503141

எங்கும் பழகலாம்!
எப்படியும் ஓடலாம்!

ஆனால் எம்மிடம் மோட்டார் வாகனம் பழகினால் போகும் பாதையை மாத்திரம் அல்ல, விதிகளையும் தெரிந்து ஓடலாம்.

பஸ், கார் அனைத்து மோட்டர் வாகனங்களுக்கும் பயிற்சி தந்து சாரதி லைசன்ஸ் எடுக்க உதவி புரிகின்றோம்.

நாம் யார் தெரியுமா?

# ஹிபத்துல் சாரதி பயிற்சி நிலையம்

இல: 21, மார்க்கெட்றோட்,
மட்டக்களப்பு.

மோட்டார் வாகனத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனப் பாடசாலை.

மட்டக்களப்பில் அழகான அச்சுவேலைகளுக்கு தாமதம் இன்றி வருகை தருக.
நம்பிக்கை நாணயம்
நிதானம் தவறாத அச்சுத் தேவைகட்கு

வளர்மதி அச்சகம்
இல 28, லொயிட் அவனியு மட்டக்களப்பு
ரெலிபோன்: 2577

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுவைத்திரள்

## தன்னம்பிக்கையில்லாத வாலிபர்களும் தமிழ் உலகமும்

ஒரு நாள் ஓட்டோ ஒன்றில் சங்குப்பிட்டியை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். ஓட்டோ சாரதி சொன்னார். நான் ஹெலியின் சூட்டினால் ஒரு காலை இழந்தேன். மனைவி, பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக பொய்க்காலால் ஓட்டோ ஓட்டுவதாகச் சொன்னார். பக்கத்தில் இருந்த மற்றவர் சொன்னார். நான் மோட்டார். சைக்கிளில் ஓடிக் கார் ஒன்றில் மோதினேன். எனது கால் முழங் காலுக்குக் கீழே முறிந்து இரண்டு துண்டாகரோட்டில் விழுந்தது. ஆனால் டாக்டர் சிவஞானசுந்தரத்தின் முயற்சியாலும், ஜேர்மனியில் உள்ள பேனாநண்பர் தொடர்பாலும் ஜேர்மனி சென்று ரோட்டில் விழுந்த காலை மீண்டும் பொருத்தி விட்டேன் எனத் தன்னம் பிக்கையுடன் பேசினார். பக்கத்தில் இருந்த எனக்கும் காலில் சற்றுக் குறைபாடுதான்! அப்போதுதான் நான் சற்று அதிர்ஷ்டசாலி என்பதை உண்மையிலேயே உணர்ந்தேன்!


அன்று கனடாவில் இருந்து வந்த ஒரு சஞ்சிகை யைப் பார்வையிட்டேன். அம்மா மட்டக்களப்பில் இறந்ததற்காக மகன் கனடா ரொறன்ரோவில் தற்கொலை செய்து கொண்ட செய்தி வெளிவந் திருந்தது. அம்மா இறந்ததற்காகத் தற்கொலை செய்வது என்றால் இந்த உலகத்தில் 10% மாணவர் கள் மிஞ்சுவார்களா என்பது சந்தேகமே.

இதை விட மிகவும் பரிதாபகரமான விசயம் ஒன்று சுவிசில் நடைபெற்று உள்ளது. சுவிட்சர்லாந்து சூரிச் நகரில் யாழ் இளைஞன் ஒருவன் தற்கொலை செய்து கொண்டான். இதில் மிகவும் பரிதாபகர மான கட்டம் என்னவெனில் தான் தற்கொலை மூலம் துடிதுடித்து இறப்பதை தனது இளம் மனை விக்குத் தெரியப்படுத்துவதற்காக வீடியோ புகைப் படக் கருவியை இயக்கி வைத்துள்ளார். இவரின் பெயர் ஆனந்தரூபன்.

தமிழ் இளைஞர்கள் மேற்கு உலகின் சொகுசான வாழ்க்கையில் சுகம் காணுகின்றனர். ஆனால் கோழைத்தனத்தை அவர்கள் தமது உள்ளத்தில் இருந்து விரட்டாது விடின் வாழ்வில் நிலை உயர வாய்ப்பில்லை.

ஓர் இளைஞன் தனது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் இளமையில் இருந்தே கடினமான பயிற்சிகளைப் பெற வேண்டும் எனப் பிரான்சிய தத்துவஞானி ரூஸோ கூறியுள்ளார். இதனைத் தமிழ் இளைஞர்கள் உணர வேண்டும்.

ஒரு பக்கத்தில் போரின் கொடுமைகள் மறு பக்கத்தில் அகதிமுகாம் அழுகைகள் தாய் நாட்டில் நடக்கின்றன. ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இன்று வெளிநாட்டில் இருப்பதால தான் உள் நாட்டுப் பானைகள் பொங்குகின்றன என்பது யாவருக்கும் தெரிந்த ஒன்று. இவ்வாறு சோறுபோட வேண்டிய தமிழ் இளைஞர்கள் கழுத்தில் சுருக்குக் கயிறு மாட்டலாமா? அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா என்பதை மறக்கலாமா?



ஒருவர்: நான் தற்கொலை செய்யலாம் என நினைத் தேன்

மற்றவர்; அப்புறம்

ஒருவர்: சவப்பெட்டி விற்கிற விலையைப் பார்த்து இந்த உலகத்திலேயே இருக்க முடிவு செய்திட்டன்.

- செழும்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் நெஞ்சம்



''சுவைத்திரளே நீ,
சுவையில் புதுமை கொண்டு
அறிவிற்கு விருந்து தந்து
சிரித்து மகிழக் களம் தந்து
இலக்கிய உலகில் - உன்
இலட்சியம் வாழ, வளர
வாழ்த்துகிறேன். வாழிய! வாழிய!! ''

- ப்ரிய வாசகி
றிஜானா ஏ. மஜீத்
- இக்கிரி கொல்லாவ -

மிஸ்டர் சுவைத்திரளார் அறிந்து கொள்வது. ஒங்கட பத்திரிகைக்கு அதிகம் வாசகர் கடிதம் முஸ்லீம் களிட மிருந்து வருகுது அவங்கதான் கூட எழுதிறாங்கள் போன இதழிலை அன்பு மணி ஐயா ''சுவைத்திரள்'' யாழ்ப்பாணத்துப் பத்திரிகை என எழுதியிருந்தார். நான் ஒணக்குச் சொல்றேன்டா இது ஒரு மூஸ்லீம் பத்திரிகை. சொஞ்சப் பத்திரிகை கூடப் போகணு மெண்டா முஸ்லீம் ஆட்களைக் கவர்ர விதமாக எழுத வேணுமெண்டு யோசிச்சிட்டா போல …………

க. சுப்பிரமணியம் 5 ம் குறிச்சி
ஏறாவூர்

அன்புள்ள திக்கவயல்,

நீங்கள் வெளியிட்ட நான்கு சுவைத்திரள் இதழ் களுடன் கட்டிப் புரண்டேன். இந்தக் கொடுமையான நாட்களிலும் சிரிப்பதற்கும் சிந்திப்பதற்குமாக ஒரு பத்திரிகையை மக்கள் முன் கொண்டு வருவது என்பது ………… அப்பப்பா! அசுரசாதனை; மிகப் பெரிய ஓர்மம். உங்கள் துணிச்சலை அச்சொட்டாகச் சொல்வதற்கு வார்த்தை இல்லை. நான் பின்வாங்கு கின்றேன்.

எழுத்தாளர் H . L . M . ஹனிபா
ஓட்டமாவடி

மிஸ்டர் சுவைத்திரளார் அறிவது. என்னிடம் ரூபா 888/ 50 கடன் பட்டுச் சென்றீர். உமது இரண்டு இதழ்கள் இங்குள்ளகடைகளில் தொங்குவதுகண்டேன் எனக்கு வருமதியான காசை ஆயுள் சந்தாவாகமாற்றி விட்டேன் சஞ்சிகை அனுப்பி வையுங்கள். இவ்விடம் மூன்று மாதங்கள் நீங்கள் வரவில்லை.

சம்சீர் (மக்வின்ஸ்) பிளாஸா கொம்பிளக்ஸ்
வெள்ளவத்தை

சுவைத்திரள் விற்பனையாகாத இடங்களுக்குத் தொடர்ந்து அனுப்ப நான் என்ன இளிச்சவாயனா? உங்கள் சந்தாவிற்காக எமது 3வது 4வது இதழ்கள் அனுப்பியுள்ளேன். எமது ஆயுள் சந்தா ரூபா 1000 . 00 எமக்கு ரூபா 112 / 50 சதம் உங்களிடம் இருந்து வருமதியாக உள்ளது. அதனை அனுப்பி வைக்கவும். அவ்வாறு அனுப்பாது விடின் உங்கள் ரெலிபோன் இலக்கம் 502471 உடன் அடிக்கடி ரிங் பண்ணுவேன்என்பதையும் தெரிவிக்கின்றேன். (ஆ+ர்)

## உயிர் விடு தூது.

ப்ரிய ………
நீ, அடித்துப் போட்ட
என் இதயக்கூடு
மறுபடியும் ஒட்டவேயில்லை.

நீ…
நடந்து போன பாதையோரம்
மலர்ந்த பூக்கள்
பறிப்பதற்கு ஆளில்லாமல்……

உன்னால்,
பின்னி முடிக்காமல்
விடப் பட்ட என் கூந்தல் ……
காற்றில் அனாதையாக ……

ஓ ……
என் ஸ்நேகமே ……
இன்னும் இந்த இதயக்கோயிலில்
உன் நாமமே
தொடராக ஒலிக்கிறது.
காற்றிலாடும் தீபமான
என்னுயிர் அணையுமுன்பே,
கையேற்க வந்துவிடு!

- றிஜானா ஏ. மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் வைரமுத்துவின் தோல்வி




கவிஞர் கண்ணதாசனின் விலாசம் எங்கே என்று விசாரித்தேன். பனகல் பூங்கா அருகில் இறங்கினால் பக்கம் என்றார்கள். உடனே பனகல் பூங்காவின் விலாசம் எங்கே என்று விசாரித்தேன். எட்டு மணிக்கு எல்லாம் அவர் புறப்பட்டுச் சென்று விடுவார் என்று எனக்குச் சொல்லப்பட்டது. நடத்துனரின் உதவியோடு பனகல் பூங்காவில் இறங்கிக் ஹென்ஸ்மேன் ரோடு எது என்று அதிகாலை ஆறு மணிக்கு விசாரித்தேன். தங்கள் மேல் வெயில் விழாமல் மரங்களே ஒன்றுக் கொன்று குடை பிடித்துக் கொண்டிருக்கும் அந்த வெங்கட் நாராயண சாலையில் மெல்ல நடந்தேன்.

என் பை கவிதை நோட்டுக்களால் கனத்தது. வீடு நெருங்க நெருங்க மனமெங்கும் ஒரு பயநதி பரவியது. கவிஞரைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி விட்டு அந்த வீட்டு முற்றத்தில் இருந்த பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டு வீட்டுக்கு முன்னால் விரிந்திருக்கும் அந்தப் பச்சைப் பரப்பையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

கவிஞர் வீட்டுக்கு முன்னால் இருக்கும் அந்தப் பூங்காவில் இருந்து புறப்பட்டு வந்த அதிகாலைக் காற்று என் சட்டைக்குள் புகுந்து விளையாடியது. என் மௌனத்தைக் காவல் காத்துக் கொண்டே காத்திருந்தேன். இப்போதுதான் கவிஞர் எழுந்து கொண்டார் என்றும் இப்போதுதான் குளிக்கிறார் என்றும், இப்போதுதான் உடைமாற்றிக் கொள்கின்றார் என்றும் அரைமணி நேரத்துக்கு ஒருமுறை அறிவிக்கப்பட்டது. நான் ஒரு மனிதனுக்காக முதல் முறையும் கடைசிமுறையும் காத்திருந்த அதிகநேரம் அதுதான். நான் எப்போதும் காத்துக்கிடக்கும் ஜாதி இலலை. யாரையும் காக்க வைக்கும் ஜாதியும் இல்லை. காத்திருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் நீளமாக விஷத்துளியாய்க் கொட்டுமே அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இல்லை எனக்கு........... ஆனால் அன்று மட்டும் பிரியம் உள்ள கவிஞனுக்காய்க் காத்திருந்த நிமிடங்கள் ஒரு காதலிக்கான காத்திருப்பைப் போல் சுகமான சுவையாக இருந்தன.

என்னைக் கடந்து சென்ற கண்கள் எல்லாம் விசித்திரப் பார்வையை வீசிச் சென்றன. இராம கண்ணப்பன் வந்து என்னை நாற்காலியோடுஎடைபோட்டார். கவிஞரை எதற்காகப் பார்க்க வேண்டும் என என் மீது வழக்குத் தொடுத்தார். அவரோடு நான் கொஞ்சம் பேச வேண்டும்; அவ்வளவு தான என்றேன். நிஜமும் அதுதான். என் வாசனை வரிகளை அவருக்கு வாசித்துக் காட்ட வேண்டும். உந்தி எழும் என் சந்தங்களின் அலைகள் அவர்மீது தெறிக்க வேண்டும்.

---



**ஆசிரியர்;** இலங்கையின் விஸ்தீரணம் எவ்வளவு?

**மாணவன்:** இருபத்து மூன்றாயிரம் சதுர மைல்கள்

**ஆசிரியர்!** மொக்கா...... இலங்கையின் சதுரமைல் 25000 சதுர மைல்கள்!

**மாணவன்:** சேர்......... நீங்கள் கடல் அரித்த பிரதேசத்தை கழித்துப் பார்க்கவில்லை!

**ஆசிரியர்:** ? ? ? ! !

- கில்லாடி

---



**ஒருத்தி:** அவள் தனது கணவனில உயிரையே வைத்திருப்பதாகச் சொன்னாள்.

**மற்றவள்:** பின்பு.........

**ஒருத்தி:** கணவன் இறந்ததும் கனத்தையில் 'காஸ் மூட்டி' எரித்து விட்டாள்.

- கில்லாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய சிற்பக்கலையும் கிரேக்க கப்பற்கலையும் சேர்ந்து காந்தாரக் கலை ஆனது மாதிரி மரபுகளின் பழைய வடிவங்களில் நான் அமர்த்தி வைத்திருக்கும் புதிய படிமங்களைக் கேட்டு அவருக்கு ஒரு சப்த போதை ஏறுகிறதா என்று நான் சோதிக்க வேண்டும். அவர் அடிக்கடி சொல்லும் அற்புதம் என்ற வார்த்தையை என் கவிதைகளின் மேல் உதிர்த்துவிட்டு அவர் போய் விடட்டும் அதுவே போதும்; இதுவே எண்ணம். உதவி கேட்டோ, உதவியாளனாகச் சேர வேண்டும் என்றோ அந்த வீட்டு முற்றத்தை நான் முற்றுக்கையிடவில்லை. ஓர் உதவியாளனுக்குரிய பண்போ, பணிவோ என் ரத்தத்தில் இல்லை. தனது குளத்துக்குத் தன்னை ராஜாவாகக் கருதிக் கொண்டிருக்கின்ற இந்தக் கிராமத்து மீன் சமுத்திரத்தில் வேலைக் காரனாக இருக்கச் சம்மதிக்காது. கடிகார முள் எட்டுமணியைத் தொட்டுவிடத் துடித்துக் கொண்டிருந்தது. நான்தான் முதலில் வந்தேன் என்ற போதிலும் காத்திருந்தோரின் எண்ணிக்கையில் நான் கடைசியாகவே கணிக்கப்பட்டேன். சிலர் அழைக்கப் பட்டார்கள் நான் மறக்கப்பட்டேன்....................

என் ஆத்திரம் பொறுமையின் கரைகளை அரிக்க ஆரம்பித்த போது கம்பீரமாக வெளியே வந்தார் கவிஞர். அற்புதமான தோற்றம் அவருக்கு! தங்கம், மஞ்சள், குளித்து வந்த மாதிரி நிறம் நெற்றியில் பொட்டென்ற பெயரில் சின்னச் சிவப்பு நிலா! சூரிய வெளிச்சம்பட்டுத் திரவப்பரப்பு பளபளப்பதுமாதிரி வெளிச்சம் மிதக்கும் விழிகள்!

சந்தனக்கட்டை வெடித்த பருத்தி போல் போட்டி நெற்றிப்பொட்டைத் தவிர மற்றெல்லாவற்றையும் நேசித்தேன். வந்தவுடன் அத்தனை பேர்மீதும் தன் பார்வையைப் பதித்தார். ஒவ்வொருவருக்கும் ஒற்றை வாக்கியத்தில் பதில் சொல்லி முற்றுப்புள்ளி வைத்து முடித்தார். கடைசியில் என்மீது ஒரு வினாப் பார்வையை வீசினார். '' நான் பச்சையப்பன் கல்லூரி மாணவன் உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும் என்று வந்தேன். என்றேன். '' நான் அவசரமாகப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கின்றேன் '' என்றார். மீண்டும்''உங்களோடு பேசுவதுதான் நோக்கம்: வேறென்றுமில்லை என்றேன் நான்தான் அவசரமாகப் போய்க்கொண்டிருக்கிறேன்'' என்றார். ''சரி...... போய்வாருங்கள் '' என்று விட்டுச் சற்று விலகி நின்றேன்.''

---

அதிகாரி: உனக்கு அறிவிருக்காடா... நேற்று வைத்த தண்ணீரை மாத்தாமால் கிளாசில் வைத்திருக்கிறாயே......!

பீயோன்; ஐயா கிணத்திலை இருக்கிற தண்ணி 8 வருசம் கலக்கி இறைக்சவில்லையே........ ஒருவரும் குற்றம் கண்டதாகத் தெரியவில்லை......

அதிகாரி: ? ? ?

- அம்பலை

---

## அவள் ஒரு நடிகை!


என்
இதய
சரணாலயத்தில்
உனக்கேண்டி
உறங்குவதற்கு
இடம்!
நீயே ......
காதல்
நாடகத்தில்
'' நடிகர் திலகத்தையே ''
மிஞ்சி விட்டவள் !

★

என்
சரணாலயத்தில்
'' காஞ்ச சருகுகளுக்கு ''
இடமில்லா விட்டாலும்
உன்னைப் போல்
ஏமாற்று
நடிகர்களின்
சரணாலயம்
திறந்திருக்கும்
அங்கு போய் .....
அடைக்கலம்
புகுந்து விடு!
மற்ற ......
சரணாலயங்களில்
குடி புகுவதற்கு
திட்டும் தீட்டும் வரை .........

- ஆரையம்பதி. . த. மலர்ச்செல்வன் -

---



ஒரு சிநேகிதன்:- என்ன ரவி இங்கே நிற்கிறே ...... ?

மற்றவன்:- இளம் பெண்கள் வந்தால் 'ரவுண்ட் அப்' செய்ய

- 'கவிஞர் கன்னையா
வவுனியா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணப்பன் முதலியோர் எல்லாம் காரின் கதவு அருகே காத்திருந்தார்கள். அந்தக் கார் சாலையைக் கடந்து திரும்புவரை என் இமைகள் இறங்கவில்லை. எனக்கு என்ன நேர்ந்தது, என்ன செய்வது என்ற திறன் இழந்து அந்த வாசலில் உறைந்து போனேன்.

அதுவரை பொத்தி வைத்திருந்த சோகம் பொத்துக் கொண்டது மனசை ஆக்கிரமித்திருந்த அழுகை மேகம் கண்களில் மெதுவாய்த் தூறல் போட்டது. கவிதை நோட்டுக்களின் சுமை கைகளிலும், கவிந்த சோகம் நெஞ்சிலும் கனத்தது.

என் கால்களுக்கு நடக்கக் கற்றுக் கொடுத்தேன். இது என்ன ஏமாற்றமா? இல்லை...... சின்னத்தாய் நார்ந்த ஓர் அவமானமா? நேரத்தை நிமிஷங்களாய் விற்றுக் கொண்டிருக்கும் எனக்கு இப்போது விளங்குகின்றது. அந்த நேரத்து அவசரத்துக்கு அதுதான் தர்மம் என்று!.............


ஆனால் அப்போது........

என் முகவரி தெரியாமலேயே என் முகம் நிராகரிக்கப்பட்டு விட்டதே என்று நான் அடர்த்தியாய் ஆதங்கப்பட்ட அந்த நிமிஷங்களில் என் கண்ணீர் மட்டுமே என் கண்ணுக்குத் தெரிந்தது. பாதையைக் கண்டு பிடித்து நடக்கிறேன்............

நன்றி: கவிஞர் வைரமுத்துவின் இதுவரையில் நான் என்ற நூலில் இருந்து.

★

## கவிஞர் கன்னையாவுடன் சிரியுங்கள்



ஒருவர்:- வேம்படியில் நின்று என்ன காணும் பார்க்கிறீர்?

மற்றவர்:- பொம்பர் குண்டு போட வருகுதா எண்டு!

ஒருவர்:- ? ?

கவிஞர் கன்னையா வவுனியா

### முடியுமா உன்னால்?

" குரோட்டன்கள் என்னை வளர்க்கின்றனவா?
நான் குரோட்டன்களை வளர்க்கின்றேனா? செடிகளால் முடியுமா மனிதனை வளர்க்க?
செடிகள் இல்லாமல் முடியுமா
மனிதர்களால் வளர?
பிறகு பேசலாம்
முதலில் செடியைக் கவனிக்கணும்
குடிக்க நீர் குந்த மண் "

- கவிஞர் பழமலை

ஆசிரியர்: கண்டி மன்னன் ராஜசிங்கன் பற்றி அறிந்ததைச் சொல்

மாணவன்: இராஜசிங்கன் காலத்தில் இருந்த மக்களும் இறந்துவிட்டனர்.

ஆசிரியர்: ? ?

- கில்லாடி

### உங்களுக்குத் தெரியுமா?

அடுத்த நூற்றாண்டிலே வருடமொன்றுக்கு 30 கோடி அமெரிக்கன் டொலர்கள் பெறுமதியான 1550 லட்சம் கனஅடி மரங்கள் ஐரோப்பாவில் அமில மழை காரணமாக அழிந்து போகும்.

1990 ம் ஆண்டில் இருந்து 11 ஆண்டுகள் பதியப்பட்ட வெப்பநிலை அளவுகளில் 7 ஆண்டுகள் மிகவும் வெப்பம் கூடிய ஆண்டுகள்.

நன்றி உலக சூழல் தினம் கட்டுரை

## கச்சேரிப் புதிர்

மட்டக்களப்புக் கச்சேரி தாபனக் கிளையில் பணிபுரியும் திரு. பத்மநாதன் அவர்கள் 6ம் பக்கம் வரும் 10 கேள்விகளை உங்களிடம் கேட்கின்றார். மட்டக்களப்புக் கச்சேரியில் வேலை செய்யும் எவரும் இப்போட்டியில் கலந்து கொள்ள வேண்டாம் இது அன்பான வேண்டுகோள். அதிர்ஷ்டசாலியான 5 பேருக்கு தலா 20 ரூபா வீதம் 5 பரிசுகள் வழங்கப்படும்.

நவீன உலகின் நவநாகரீக உடைத் தேவைகட்கு நாடுங்கள்

ரெடிமேட் சென்ரர்

02, திருமலை வீதி
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கேள்விகள்

1) நீராவிக் கப்பலில் மஞ்சள் நிறக்கொடி எப்போது பறக்க விடப்படும்
2) இரும்புச் சத்து அதிகமாகக் கிடைக்கும் கீரை எது?
3) மனித உடலில் மிகவும் சிறிய எலும்பு எங்கே உள்ளது?
4) ஒரு ஹெக்டெயர் என்பது எத்தனை சதுர மீட்டர்?
5) இலங்கையில் யாருடைய உருவம் பொறிக்கப்பட்ட முத்திரை முதலில் வெளியிடப்பட்டது.
6) பேராதனைப் பல்கலைக்கழகம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
7) தற்போது பங்களாதேசில் நடைபெற்ற சாக் விளையாட்டுப் போட்டியில் இலங்கை பெற்ற தங்கப் பதக்கங்கள் எத்தனை?
8) இலங்கை மத்திய வங்கி ஆளுனரின் பெயர் என்ன?
9) மிகக்கூடிய பற்கள் கொண்ட ஊரும் விலங்கு எது?
10) உலக எயிட்ஸ் தினம் எப்போது?

**வாசகர்களே ...... கீழேயுள்ள கூப்பனை வெட்டி அனுப்புங்கள்**

கச்சேரிப் புதிர்
C/O திரு. பத்மநாதன்
தாபனக். கிளை கச்சேரி
மட்டக்களப்பு.

பத்தும் சரியான விடைகள் கிடைக்காவிடின் குறைந்த விடைகள் பரிசீலனை செய்யப்படும்

சென்ற இதழ்ப் போட்டி முடிவுகளும் இந்த இதழ்ப் போட்டி முடிவுகளும் அடுத்த இதழில் வெளியிடப் படும் (ஆ + ர்)

### சொன்னார் இப்படி

முப்பது வயதுக்கு முன்னர் நீயொரு சோசலிஷ வாதியாக இல்லாது இருந்தால் இருதயம் இல்லாதவன். முப்பதுக்குப் பின்னர் நீயொரு முதலாளித்துவ வாதியாக இல்லாவிட்டால் உனக்கு மூளை இல்லை என்று அர்த்தமாகும்.

வின்சன் சர்ச்சில்

## சிரிப்புக்கள் பலவிதம்
## சிரிப்பதும் நானாவிதம்

கல்லடிக் கதிர்காமு



### மொட்டைச் சிரிப்பு

தலைமயிர் தொடர்ந்து கொட்ட ஆரம்பித்ததால் விரக்தியடைந்த பிரிட்டிஸ் நாட்டவர் ஒருவர் தற்கொலை புரிந்து கொண்டார். மயிர் புனர் நடுகை மேற்கொண்டும் வழுக்கை மறையாத காரணத்தால் இவர் தற்கொலை செய்துகொண்டார். ரோய்வைட்ஸ் இவரது பெயர் வயது 43

- ராய்ட்டர் -

### வேதனைச் சிரிப்பு

பாக்தாத் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்கு எதிராக ஈராக் பழிவாங்காது என்றும் அதுஅமெரிக்காவுடன் உறவைச் சகஜப்படுத்த விரும்புவதாகவும் உதவிபிரதமர் அசீஸ் கூறியுள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ச் சிரிப்பு

இன்று எமது மாணவர்கள் தமிழைப் பேசினாலும், தமிழ் மொழியைக் கற்றாலும்கூட அதிக அளவானோர் தமிழ்மொழிப் பரீட்சையில் தோல்வி காண்கின்றனர். இது ஏன் என்று ஆசிரியர்கள் சிந்திக்கவேண்டும்.

கல்வி ராஜாங்க அமைச்சர்
திருமதி. ராஜமனோகரி புலேந்திரன்

## நன்றிச் சிரிப்பு

இந்தியாவின் சுதந்திரப் போராட்ட காலத்தில் போராட்டத்துக்காக அதிக நிதி கொடுத்தவர் ஸ்ரீ - எச் என்ற முஸ்லீம் பெருமகனே! அவர் கொடுத்த நிதி 1 கோடி ரூபாய்.

இலங்கை மக்கள் மரம் வளர்த்துப் பசியாற 1 கோடி மரங்கள் இதுவரை கொடுத்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவதர்மவள்ளல் திரு க. கனகராஜா அதிபர்

கொழும்பில் இந்து சமய கலாச்சார நிலையம் அமைப்பதற்கு 1 கோடி ரூபா நிதியளித்தவர் "பாலா" என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அமரர் பாலசுப்பிரமணியம் அவர்களாகும். இவர் யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்தவர். இந்த மூவரையும் வரலாறு மறப்பது கஷ்டமானது


## வீட்டுச் சிரிப்பு

1983ம் ஆண்டில் கொழும்பில் இனக்கலவரம் ஏற்பட்டது. பலர் கொழும்பில் உள்ள தமது வீட்டினையே இழந்தார்கள். வாங்கினால் வட - கிழக்கில் வீடு சீதனம் என்றார்கள். இப்போது அது வேண்டாம் கொழும்பில் வீடு தா என்கின்றார்கள். எமது இளைஞர்கள் வெளிநாடு சென்றமையால் காசு இல்லாதவர்களும் இப்போது பொலிந்த காசு வைத்துள்ளார்கள். அவர்கள் கொழும்பில் வீடு வாங்கவும், கொடுக்கவும் தயாராக உள்ளார்கள். இவ்வாறு வசதியில்லாத பெண்கள், கொழும்பில் வீடில்லாதவர்கள் கல்யாணம் செய்யாது ஏங்கி நிற்கின்றார்கள் வாழத் தெரிந்தவர்கள் எமது சந்தர்ப்பவாத மாப்பிள்ளைகள கழுத்தைக் கொடுக்கத் தெரிந்தவர்கள் எமது தமிழ்க்குமர்கள் என்ன விலையும் கொடுக்கத் தவறாதவர்கள் அவர்களின் பெற்றோர். வாழ்க...... சந்தர்ப்பவாத உலகம்.

## பாதை மாறிய சிரிப்பு

ஒரு சிங்களப் பெண்மணி புதிதாக உதவி அரசாங்க அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவருக்குத் தான் புதிதாக வீடு கட்டவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் காசு வசதி இருக்கவில்லை எனவே தனக்கு உதவி செய்யுமாறு சிங்களப் பத்திரிகைகளில் விளம்பரம் போடப்பட்டது. அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக 1 லட்சம் 2லட்சம் தருவதாக விண்ணப்பங்கள் குவிந்தன. அவருக்கு விஷயம் விளங்கவில்லை. திரும்பவும் தான் கொடுத்த விளம்பரத்தை A/G/A அம்மா பார்வையிட்டார்

# குறுக்கெழுத்துப் போட்டி




ஆக்கம்; A. L. சியாத் பஹ்மி
(காத்தான்குடி)

**இடமிருந்து வலம்............**

1. வாயுறை வாழ்த்து என்ற நூலை இப்படியும் அழைப்பர்.
15. பயத்தின் ஒத்த சொல்
17. மன்னன் என்பதன் ஒத்த சொல்
27. குடி அல்லது போதை பாவித்தால் ஏற்படும்
33. உலகில் இதை அனுபவித்தே ஆகவேண்டும்
45. இதனைக் கூறாத கவிஞனே இல்லையெனலாம்
52. எல்லோரும் ஒரு - மக்கள் என்று வாழவேண்டும்
57. மிகத்தந்திரமான மிருகம்
60. இதன் காதலன் வண்டு

**மேலிருந்து கீழ்...........**

1. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் இங்கு உண்டு
4. இப்பூவுலகைக் குறிக்கும் சொல்
8. வேகத்தைக் குறிக்கும் சொல்
22. ஒரு மரக்கறிக்காய்
27. ஆப்ரேஷனின் மூலம் இதயத்தை மாற்றலாம் ஆனால் இதை மாற்றமுடியாது
40. திருக்குறளில் "நுன் மாண் முழைபுலம் இல்லான் எழில் நலம் மண் மாண்புனை பாவையாற்று" எத்தலைப்பில் வருகின்றது
50. யானையைக் குறிக்கும் இச்சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களே குறுக்கெழுத்துப் போட்டி 02 க்குச் சரியான பதில்கள் எதுவும் வரவில்லை இதனால் எவரும் பரிசு பெறவில்லை.

எனக்கு வட்டிக்கு (பொலி - சிங்களத்தில்) 50000/- தேவை என்ற விளம்பரம் பின்வருமாறு பிரசுரமாகி இருந்தது. உதவி அரசாங்க அதிபராக இருக்கும் எனக்கு ஜாலியாக இருக்க (ஜொலி - சிங்களம்) ரூபா 50000/- கொடுக்கக்கூடிய ஒருவர் தேவை விண்ணப்பிக்கவும்.

**பூஜ்யச் சிரிப்பு**

பூஜ்யத்தைக் கண்டுபிடித்ததே இந்தியாதான். அந்தப் பூஜ்யத்தில் நாட்டை நிற்க வைத்துவிட்டனர்'

- நடிகை லட்சுமி -

**சுடலைச் சிரிப்பு**

ஒவ்வொரு நாளும் நாம் சுடலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம். ஆனால் சுடலைக்கு எவ்வளவு தூரத்தில் என்பது தெரியாது

-யாரோ -



## நகைச்சுவைக் கவிதைப்போட்டி.

**இல 63**

அன்பின் வாசகர்களே மேலேயுள்ள படத்துக்கு அமைவாக ஒரு நகைச் சுவைக் கவிதை எழுதி அனுப்புங்கள். போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெறும் மூவருக்கு தலா 50 ரூபாய்களைச் சுவைத் திரள் பரிசாக வழங்கும்.

கீழேயுள்ள கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

**நகைச் சுவைக்கவிதைப் போட்டி**

C/O சுவைத்திரள்
481, பார் றோட்,
மட்டிக்களி
மட்டக்களப்பு.

# வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் மட்டக்களப்புப் பேய்க் கதைகள்




ஒரு ஊரில் ஒரு தாய்க்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தவன் ஆண். இரண்டாவது பெண் கடைக்குட்டி ஆண். பெண்பிள்ளை மிகவும் அழகானவள். அவளும் சகோதரர்களும் தாயும் ஒரு சேனை போட்டிருந்தார்கள். காலையில் எழுந்து தாயும் சகோதரர்களும் சேனைக்குப் போய்விடுவார்கள். அவள் சாப்பாடு தயார் செய்து எடுத்துக் கொண்டு மதியமாக சேனைக்குப் போய் சாப்பாட்டைக் கொடுத்து விட்டு இயன்ற மட்டும் வேலை செய்து வருவது வழக்கம்,

அந்தக் காட்டிலே ஒரு கரடி இருந்தது- அது இந்தப்பிள்ளை போகிற வழியில் இரைதேடிக்கொண்டு திரியும், ஒருநாள் சரியான வெயிலாக இருந்தபடியால் அதியாகுதியா வெயிலில் ஓடிஓடி மரநிழலில் நின்று நின்று அந்தப்பிள்ளை அவதிப்பட்டுப் போகும்போது இந்தக் கரடி இடையில் அகப்பட்டது.

கரடியாரே கரடியாரே கொடிய வெயிலாய் இருக்கு அய்யா காற்றுப் போல பாரமுள்ள கன்னி என்னைச் சுமந்து செல்லேன் என்று கேட்டது.

**விலாசமாற்றம் 'சுவைத்திரள்,**

சுவைத்திரள் வாசகர்களே......எமது பழைய விலாசம் இப்போது செல்லுபடியாகாது. எமது புதிய விலாசம் பின்வருமாறு;-
481, பார் றோட்.
மட்டிக்களி
மட்டக்களப்பு.
நினைவில் வைத்திருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியே கன்னியே கலியாணம் செய்வேன் என்றால் உன்னை மட்டுமல்ல உன் பிள்ளைகளையும் சுமந்து போவேன் என்றது.

நல்லநாள் வரட்டும் நாடும் மலியட்டும் உன்னை நான் உள்ளபடி கலியாணம் செய்வேன் என்றாள். அதன் பிறகு ஒவ்வொரு நாளும் கரடி அந்தப்பிள்ளையைக் காத்திருக்கும். அவள் சாப்பாட்டோடு வந்து முதுகில் ஏறுவாள். அது அம்புப்பாய்ச்சலாகச் சேனைக் குக்கிட்டே கொண்டு போய்விட்டு;

நல்ல நாள் வரல்லையா? நாடு மலியல்லையா? நம்மட கலியாணம் எப்ப கிளி என்று கேட்கும்,

கெட்டநாள் தொலையட்டும் கேழ்வரகு விளையட்டும் அதுவரையும் பொறுத்துக்கோ அப்புறந்தான் கலியாணம் என்று சொல்லி விட்டுப் போவாள்.

இப்படி ஏமாற்ற ஏமாற்ற கரடிக்குப் பொறுக்கவில்லை, என்றாலும் இரண்டு பேரிட்டக் கேட்டுப் பார்ப்போம் என்று எண்ணி அந்தப் பக்கம் வந்த அண்ணாவியாரிடம் அண்ணாவியாரே, அண்ணாவியாரே நல்ல நாள் வரலையா நாடு மலியல்லையா என்று கேட்டது. அவருக்குக் கரடியைக்கண்ட பயம். வெகுதூரத்தில் போய் நின்று, இன்றைக்கு நல்லநாள். நாடு மலிஞ்சிருக்கு என்று சொல்லிப் போனார். அதன் பிறகு அப்பக்கத்தால் ஒரு வண்ணான் மூட்டையுடன் வந்தான். அவனோடு அவனுடைய மச்சானும் வந்தான். அப்போது வண்ணான்: இன்றையோடி என்ர கெட்டகாலம் தொலைஞ்சுது என்றான். எனக்கும் அப்படித்தான் கேழ்வரகு நல்லா விளைஞ்சுகிடக்கு என்று அவனுடைய மச்சான் சொன்னான்.

---

## எல்லாம் பணத்துக்காகத்தான்

டாக்டர் - இப்போது உன்வருத்தமெல்லாம் சுகம் இனிமேல் வடிகுடித்து வாட்டுக்கு வந்தால் உன்னைக் கவனிக்கவே மாட்டேன் போ;

நோயாளி - சரிசேர்; நான் வேற பிறைவேற் டாக்டரிடம் காட்டுவேன்.

டாக்டர்:- அட நீயென்னப்பா நான் ஒரு விளையாட்டுக்குச் சொன்னால் ...... நம்புறியே. நீ மீண்டும் இங்கே வா;

- அமிர்தகழியான் -

---

வாசகர்களே! சோதிட ரீதியில் சுவாமி விபுலானந்தரின் பிறந்தநாள் குறிப்பு ஆராய்ச்சி பிழையானது எது? சரியானது எது? புதுமையான இந்தத் தொடர் சட்டுரையை அடுத்த இதழில் ஆசிரியர் பேரானந்தம் எழுதுகின்றார். வாசகர்களே உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

(ஆ + ர்)

---

ஓகோ அண்ணாவியார் சொல்லிப் போனார். நல்ல காலம் வந்தது நாடுமலிஞ்சதென்று, வண்ணானும் மச்சானும் கெட்டகாலம் விட்டுது, கேழ்வரகு விளைஞ்சுது என்றார்கள். இனி பொறுத்து இருக்க வேண்டியதவசியம் இல்லை. என்று எண்ணிக்கொண்டிருக்கும் போது சாப்பாடு எடுத்துக்கொண்டு பிள்ளை வந்தது. ஏற்றிக் கொண்டிருக்கும் போது,

நல்ல நாள் வந்துத்து நாடு மலிஞ்சுது
கெட்டகாலம் போயிற்றுகேழ்வரகு விளைஞ்சுத்து
இனி நமக்குக் கலியாணம்
இனு நமக்குக் கலியாணம் என்று வேறு வழியாலபோய் ஒரு பழைய வீட்டில் புகுந்தது.

அங்கே அந்தப் பிள்ளையைக் கலியாணம் செய்து பிள்ளை பெற்று இருந்தது. ஒவ்வொரு நாளும் வெளியே போக முதல் கதவை அடைத்து கல்லைப் பாரம் வைத்துச் செல்லுமாம்.

---

## மச்சானின் மனம் நிறைந்த ஆசை

வச்சிக்கள்ளை மறந்து - சில
'வடி' குடித்து நடந்து
மச்சாள் முன்னால் விழுந்து - நான்
வாந்தி எடுக்க ஆசை !

வங்கிக் கணக்கில் லட்சம் - நான்
வைத்து இருக்கிறேன் மாமா
என்றொரு பொய்யைச் சொல்லி - மச்சியை
இழுத்துப் போக ஆசை !

வேட்டி, சால்வையை வெறுக்கும் - தமிழ்
வாத்திக்கு மச்சாளை விற்க
காட்டித்திரிகிறார் புதினம் - மாமா
கால்களை உடைத்திட ஆசை!

மாமனை விடவும் மோசம் - என்
மாமிக்கு இல்லை பாசம்
சாமத்தில் அவளைநான் கடத்தி - நல்ல
சவுக்கடி கொடுத்திட ஆசை!

மெல்ல மெல்ல மாமன் - என்
மாமி மகளையும் ஏய்த்து
உள்ளதையெல்லாம் சுருட்டி - வெளியே
ஓடிப் போகவும் ஆசை.

- அமிர்தகழியான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரும் வந்தால் திறவாதே
அம்மை வந்தால் திறவாதே
அண்ணன் வந்தால் திறவாதே
தம்பி வந்தால் திறவாதே
தேனும் இறைச்சியும் தித்திப்புப் பலகாரமும்

நானும் வந்தால் மாத்திரம் திற உன்று சொல்லிப்போகுமாம். அப்படியே ஒவ்வொரு நாளும் வந்து ஒரு சின்ன இடவுக்குள்ளால் முதலில் தேனைக் கொடுக்குமாம். பின்பு இறைச்சியைக் கொடுக்குமாம். அதற்குப் பிறகு பலகாரங் கொடுக்குமாம். அதன் பிறகு அடைவைத்த கல்லை எடுத்து உள்ளே போகுமாம்.

பிள்ளையைக் காணாமல் தேடித் தேடிப்பார்த்து அலைந்தவர்கள் வேறு ஊரில் போய்ப் பார்க்க யோசித்தார்கள். பின்பு மக்களைப் பார்த்து என்ர மகளைக் காணாமல் இருக்க என்னால் முடியவில்லை. நீங்க அயலூர்களில் போய்ப் பார்த்து வாருங்கள் என்று சொல்லி தவிட்டுப் பிட்டும் அவித்து, தாரா இறைச்சிக் கறியும் ஆக்கிக் கொடுத்தனுப்பினாள்

மூத்தவன் முழுவதையும் ஒரே மூச்சிலே சாப்பிட்டு விட்டான். இளையவனோ ஒரு பிடி எடுத்துச் சாப்பிட்டுவிட்டு மீதியை கட்டி வைத்துக்கொண்டான்.

---

இப்போது கலை இலக்கிய உலகில் மாபெரும் சாதனை செய்து வருகின்றது.

"தோழன்"

(கலை, இலக்கிய ஏடு)

விபரங்கள்.

ஆசிரியர் ' நிந்தாதாசன்
23, நாயவல,
மாவனல்ல.

---

இருவரும் அந்தப் பிள்ளையைத் தேடித் தேடி அலுத்துமதியமாகுமட்டும் நடந்தார்கள். இருவருக்கும் பசி எடுத்தது மூத்தவனிடம் சாப்பிட ஒன்றும் இருக்கவில்லை, இளையவனிடம் போதியளவு தவிட்டுப்பிட்டும் தாரா இறைச்சிக் கறியும் இருந்தது. தமையன் தம்பியிடம் கொஞ்சம் தவிட்டுப்பிட்டும் தாரா இறைச்சியும் கேட்டான். அதற்கு அவன் சரி; நான் தருவேன். அதற்குப்பதிலாக

நான் கேட்கிறதெல்லாம் தரவேண்டும்.
காண்கிறதெல்லாம் பார்க்க விடவேண்டும்
விரும்பிறதெல்லாம் செய்ய விட வேண்டும்
விருப்பமானால் எடுத்துச் சாப்பிடு என்றான்.

என்ன புதினமானதைக் கேட்கப்போகிறான்? என்ன புதினத்தைக் கேட்கப்போகிறான்? என்ன புதினமானதைக் காணப் போகிறான்? இல்லாததைக் கேட்கப் போகிறானா, இல்லாததைப் பார்க்கப்போகிறானா என்று எண்ணி சரி உன் விருப்பப்படியே,

நீ கேட்கிறதெல்லாம் வாங்கித் தருவேன்
நீ காண்கிறதெல்லாம் பார்க்க விடுவேன்
நீ விரும்பிறதெல்லாம் செய்யவிடுவேன் என்று

சத்தியஞ்செய்து தவிட்டுப்பிட்டையும் தாரா இறைச்சியையுந் தின்றான்.

சாப்பிட்டு முடித்த பின்னர் இருவரும் எழுந்து சற்றுத் தூரம் நடந்தனர். அங்கே ஒரு ஒற்றைப் பனை நின்றது. அதைக்கண்ட தம்பி அதைப்பிடிங்கித் தா என்று தமையனிடம் கேட்டான்.

அது உனக்கு எதற்கு? சும்மா பேசாமல் வாடா என்று தமையன் சொல்ல, கேட்டதெல்லாம் வாங்கித் தருவதாகச் சொன்னாயே. இதைப் பிடுங்கித் தராவிட்டால் என்னுடைய தவிட்டுப்பிட்டையும் தாரா இறைச்சியையும் தா என்று அழுதான்

தமையன் என்ன செய்வான், பனைமரத்தைப் பிடுங்கிக் கொடுத்தான். அதை அவனே சுமந்த சென்றான். இன்னும் சற்றுத் தூரஞ் சென்றதும், ஒரு வண்ணானுடைய காளவம் வைக்கிற பனையைக் கண்டு அதை எடுத்துத் தரச் சொன்னான். இது நமக்கெதுக்கடா. அதுவும் வண்ணான் வந்து கண்டால் அடித்து வெளுத்துவிடுவான் என்று மறுதலித்தான். நீ கேட்கிறதெல்லாம் வாங்கித் தருவேன் என்றுதானே என்னுடைய தவிட்டுப் பிட்டையுந் தாரா இறைச்சியையும் சாப்பிட்ட நீ. அப்படி இதை எடுத்துத் தரமுடியாவிட்டால் எனது தவிட்டுப்பிட்டையுந் தாரா இறைச்சியையுந் தா என்று அழுதான்.

---

## அழகான முடிவுப் போட்டி இல - 02

சென்ற இதழில் வெளியிடப் பெற்ற அழகான முடிவுப் போட்டி இல 02 ல் பல எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர். ஆனால் அவர்களால் பரிசினைப் பெற முடியவில்லை. பாராட்டுதல்களை மாத்திரம் அவர்கள் பெறுகின்றனர், அந்த அதிர்ஷ்டசாலிகள்

(1) செல்வி எஸ். குமுதினி
37/1, பிள்ளையார் கோவில் றோட்
கல்லடி மட்டக்களப்பு.

(2) செல்வி. சுவர்ணா விநாயகமூர்த்தி
பரமநயினார் கோயிலடி
ஆரைப்பற்றை - 01

இவர்களின் கதைகள் அடுத்த இதழில் இடம் பெறும்;
(ஆ+ர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சிக் கவிஞர்

இரா. தவராஜாவின்

# முத்தான கவிதைகள் மூன்று



## குரவை எழுப்ப குமர்களில்லை

மங்கள விழாக்களில்
மங்கையரின்
குரவையொலி
பட்டுப் போய்
படுத்து விட்டது

★ ★ ★

கிழிந்து போன
பட்டு வேட்டி
''றங்கு'' பெட்டிக்குள்
அடங்குவது போல்
குரவை கலாச்சாரம்
வறியவனின்
வயிறாய்
ஒட்டி உலர்ந்து விட்டது

★ ★ ★

பெண்களை
குயில்களென்று
பெருமைப் பட்டாய்
தமிழா
இன்று
குரவையெழுப்ப
குமர்களில்லை

★ ★ ★

தமிழ்க் குமர்காள்
தமிழிச்சியாய் எழுங்கள்
கலாச்சாரம் கனிய
கை கொடுங்கள்
கோகிலமாய் கூவுங்கள்
குரவையெங்கும்
ஒலிக்கட்டும்

- மட்டுநகர்
இரா. தவராஜா

மிகுதிக் கவிதைகள் 15ம், 17ம் பக்கத்தில்

இதென்ன தொல்லையாப் போயிற்றுடா என்று சொல்லி அந்தப் பானையையும் எடுத்துக்கொண்டு போனார்கள்.

சற்றுத்தூரம் போனபோது. ஒரு குட்டிக் கழுதை நிற்கக் கண்டு அதையும் பிடித்துத் தரும்படி அழுதான். என்ன செய்யலாம். பிடித்துக் கொடா விட்டால் தவிட்டுப்பிட்டும் தாரா இறைச்சியும் கேட்பானே என்று பேசாமல் பிடித்துக்கொண்டு போனார்கள்.

சூரியன் மறையுந்தருவாயாயிற்று எங் க தங்கலாம் என்று பார்த்தபோது ஒரு பாழடைந்த கட்டிடம் தெரிந்தது. அங்கே அவர்கள் போய்ப்பார்த்தால் கதவெல்லாம் மூடி பாராங்கல்லை அடைவைத் திருந்தது. சரி, இப்ப பொழுதுபட்டுவருகிறது கீழே இருக்கவும் இடமில்லை. மேலே கூரையில் ஏறி இராப்பொழுதைக் கழிப்போம் என்று எண்ணி அப்படியே செய்தனர்.

தம்பியின் பிடிவாதத்தால் கழுதைக் குட்டியை யும் பிடித்து அவதிப்பட்டு கூரையில் ஏற்றிவிட்டனர்

இரை தேடிப்போன கரடி திரும்பிவந்து பார்த் தது. வேறுமணம் வீசுகிறது. இங்கே யாரோ வந்தி ருக்கிறார்கள் என்று எண்ணி நாலா பக்கமும் பார்த்தது.

ஒருவரையும் காணவில்லை. ஒருவேளை தனது மனைவியின் கள்ளக் காதலர்களோ அல்லது வேறு யாரோ வந்திருப்பர் என்று எண்ணி, ஆண்செடி நாறுது பெண் செடி நாறுது யாரடி வந்து நரன் என்று கூறி கதவைத் திறந்தது. மூலைக்குமூலை ஓடிற்று. அப்போது அவள் இங்கு ஒருவரும் வர வில்லை ' பூட்டியகதவு, பூட்டியிருக்கு சாத்தியகல்லு சாத்தியிருக்க வேற்றாள் ஒரு வரும் இங்கில்லை என்று கூறினாள். இந்தச் சத்தம் சத்தடியெல்லாம் கூரைக்கு மேலிருந்தவர்களுக்குக் கேட்டது.

தம்பிக்காரன் நான் கூரையைப் பிரித்துப் போட்டு பார்க்கப் போறேன் என்று சொன்னான். அடே மடப்பயலே, கீழே ஏதோ ஒரு மனுசன் அல் லாத ''முறுகம்,, பேசுது நம்மைப் பார்த்தால் நம் மைப் பிடித்துத் தின்றுவிடும் பேசாமயிருடா என்றான்.

பார்க்கிறதெல்லாம் பார்க்க விடுவேன் என்று தானே என்ற தவிட்டுப்பிட்டையும் தாரா இறைச்சி யையும் திண்டநீ. இப்ப பார்க்கவிடமாட்டேன் என் கிறாயே அப்படியென்றால் என்ற தவிட்டுப்பிட் டையும் தாரா இறைச்சியையுந் தா என்று அழுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி சத்தம் போடாமல் மெதுவாகக் கூரையைப் பிரித்துப் பார் என்றான். அதன்படி அவன் பிரித்துப் பார்க்க முயன்றபோது பக்கத்தில் இருந்த பனை சறுக்கி கீழே இறங்கிற்று. அதைக்கண்ட கரடி இதென்னடா என்று பயந்தது. அந்த வேளைபார்த்து வண்ணானின் பானையும் கூரைக்குள் தொங்கிக் கொண்டிருந்தது.

கடவுளே இது என்ன வயிறும் காலும் உள்ள முறுகம் இது. இதெப்படி இங்கே வந்தது என்று கரடி பயந்து போய் நின்றது. இதேவேளை, அண்ணே எனக்கு மூத்திரம் முடுக்குது செய்யட்டுமா என்று கேட்டான். மெதுவாகப் பொய்யடா என்று தவிட்டுப் பிட்டுக்கும் தாரா இறைச்சிக்கும் பயந்துகொண்டு உத்தரவு கொடுத்தான்.

அவனோ சளசளத்துப் பெய்துவிட்டான். அதைக் கண்ட கரடி அடியே இதென்னடி என்றுமில்லாத புதினம்! என்று கேட்டது. இதற்கிடையில் விசயத்தை உணர்ந்து கொண்ட அவன் தான் விடுதலையாகும் வேளை வந்ததென்று நம்பி. இது பக்கத்து வேப்பமரத்தில் இருக்கும் பூதம். நீங்க இல்லாத நேரம் வீட்டைச் சுற்றிச் சுற்றியோடி அடியே உன் புருசன் எங்கேடி என்று கேட்கும். அதுதானாக்கும் என்றது.

அப்போது அண்ணே அண்ணே எனக்கு வயிற்றில் பேதியாக இருக்கிறது. நான் வயிற்றால போகட்டுமா என்றான். அதற்கு அடே கீழே இருக்கிற நிலைபரத்தை அறியாமல் பேசுகிறாயே, பார்த்து மெள்ள மெள்ளப் போடா என்றான். அவனோ சளசளத்தபேதியானான். இதைப் பார்த்த கரடிக்கு நடுக்கம் எடுக்கத் தொடங்கிற்று.

பின்பு, அண்ணே அண்ணே எனக்குப் பாட்டு முடுக்குதுதடா, பாடட்டா என்று கேட்டான். அட பாவிமகனே நாம உயிரோட வீட்டபோய்ச் சேர உனக்கு விருப்பமில்லையடா பேசாமல் இரடா என்றான்.

தம்பியோ தவிட்டுப்பிட்டுக் கதையைத் தொடங்கவும், அடே மெதுவாகப் பாடுடா என்றான். அவனும் சந்தோசத்தால் பாடினான். இதைக்கேட்ட கழுதையும் கத்தத் தொடங்கிற்று. அடியே பாவி என்னைக் கொல்லச் சதி செய்துபோட்டு இருக்கயேடி என்று கரடி தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடத் தொடங்கிற்று.

இதேவேளை கீழே இருந்தவளைப் பார்த்தான் தம்பி. எனது அக்காவென்று கத்திக்கொண்டு கீழே விழுந்தான். தமையனும் வந்து அவளையும் பிள்ளையையும் கூட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்து விபரத்தை அறிந்து வியாகூலப்பட்டார்கள்.

ஆனால் கரடி வந்து மீண்டும் தொல்லை தருமே என்றெண்ணி, ஒரு யுத்தி செய்து நம்பி காட்டிற்குள் போனான். கரடியைக் கண்டு கரடி மச்சான் நீ இனிக் காட்டிலிருக்க வேண்டாம் வா வீட்டிற்குப் போவோம் என்று கூட்டிக் கொண்டு வந்து சுடு தண்ணீரில் குளித்து வா மச்சான் என்று கொதித்த நீரில் பாய விட்டுக் கொன்று விட்டான்.

அதன் பிறகு அவள் நிம்மதியாக தானும் தன் பிள்ளையுமாக வாழ்ந்து வந்தான்.

நன்றி: (மட்டக்களப்பு மாநில உபகதைகள் என்ற நூலில் இருந்து)




வ. காராளசிங்கம் வவுனியா

கே: அரசாங்கத்துக்கு வெட்கக்கேடு எது?

ப: போரால் அழிந்து கொண்டிருக்கும் வடபகுதி மக்களுக்குத் தரப்படுத்தல் போடுவது.

★

ச. மணிமாறன் பெரியகல்லாறு

கே: இலவசமாகக் கிடைத்தால் அதனைப் பெற்றுக் கொள்ள ஓடும் மனிதர்கள் இலவசமாக எதனைக் கொடுத்தால் திரும்பி ஓடுவார்கள்

ப: எயிட்ஸ் ...... ஹா ...... ஹா ......

★

மு. வெங்கட்ராமன் மெயின்கேற் காட் திருச்சி

கே: சமீபத்தில் நீங்கள் பத்திரிகையில் கண்டு ரசித்த தன்மான நிகழ்ச்சி எதனையும் கூற முடியுமா?

ப; ஆமா ...... தொரே ...... அரசாங்கம் கொடுத்த ஜனசவிய உதவியை 8 வேடுவ குடும்பங்கள் நிராகரித்து உள்ளன! மாடிக் கட்டிடத்தில் வாழ்ந்து கொண்டு கூப்பன் முத்திரை வைத்திருக்கும் மானம் கெட்டதுகளை இவர்களுடன் ஒப்பிட்டு ரசித்தேன்.

★

ஜனாப்: மசூத்அகமத் 60 மத்தியவீதி காத்தான்குடி

கே; நகைச் சுவையைப் பற்றித் தெரியாதவர்களை நாம் எவ்வாறு மதிக்க வேண்டும்?

ப: அவருக்கு இரண்டு பெரிய கொம்பு தலையில் இருப்பதாகக் கற்பனை செய்து நடக்க வேண்டும்.

★

கே. முருகப்பன் அமிர்தகழி மட்டக்களப்பு


கே. உங்களைச் சந்திப்பதற்கு ஒரு பத்திரிகை ஆசிரியர், எழுத்தாளர், விமர்சகர், நிருபர், ஓவியர், வந்தால் யாரை முதலில் சந்திப்பீர்?

ப: முதலில் வந்து இருந்தவரை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: இலங்கையில் ஒரு பத்திரிகை ஆசிரியர்க்கும் எழுத்தாளர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?



ப: இரண்டு பத்திரிகை ஆசிரியர்கள் ஒரு போதும் ஒற்றுமையாக இருந்தது இல்லை. எழுத்தாளர்கள் ஒரு போதும் ஐக்கியமாக வாழ்ந்ததில்லை இது ஒற்றுமை.
பத்திரிகை ஆசிரியர் தலையில்லாத முதலாளிக்குக் கீழ் தலையுள்ள பேனையால் எழுதுவதால் தாலிக் கொடியை அடைவு வைக்கத் தேவை இல்லை. எழுத்தாளர்கள் கௌரவத்திற்காக வாழ்வதால் எமது எழுத்துக்களைப் பிரசுரிக்க தாலிக் கொடியை அடவு வைப்பர். இது வேற்றுமை ...

★

ந. கனகராஜன் கல்லடி

கே: சந்தர்ப்பவாதம் என்றால் என்ன?

ப; வவுனியாவிற்கு எண்ணெயைக் காட்டி ஏறாவூருக்குத் தண்ணியைக் காட்டுவது சந்தர்ப்ப வாதம்.

★

த. விக்னேஸ்வரன் செம்மன்வீதி வாழைச்சேனை

கே: சமீபத்தில் நீர் ரசித்த ஒரு பொன்மொழி சொல்ல முடியுமா?

ப: வேலைக் காரனுக்கு உனது ரகசியத்தைச் சொன்னால் அவனை உனது எஜமான் ஆக்கிக்கொள்கிறாய் என ஆபிரகாம் லிங்கன் கூறினார். சமீபத்தில் இதனை நான் ரசித்தேன்.

★

உ. தங்கேஸ் கோட்டைக்கல்லாறு

கே: ஒரு மனிதன் எருமையாவது எப்போது?பசுவாக இருப்பது எப்போது?

ப; ரயிலில் சீற் பிடிக்கும் போது எருமையாகின்றான். சீற் பிடித்த பின்பு பசு ஆகின்றான்.

★

கே; ஒருவன் பொய் சொல்கிறானா எனப் பார்க்கும் மிசின் வந்துள்ளதாம்! மிசினுக்குள் இன்னும் வராத மிசின் எது?

ப; காமுகர்களை இனம் காண்பதற்கு மிசின் தேவை

க. வரதராஜன் அருணகிரிவீதி மட்டக்களப்பு

கே; குரங்கில் இருந்து மனிதன் பிறந்தான் என்பதை நிருபிக்க முடியுமா?

ப;முடியும். மரத்திலிருந்து விழுந்த குரங்குக் குட்டியைக் குரங்கு ஏற்பது இல்லை. ஒரு சாதியில் இருந்து மறுசாதிக்குச் சென்றவனை மனிதன் ஏற்பதில்லை. இது குரங்கிலிருந்து பெற்ற குணம் தானே வராதா ........

★

கெ. தட்சணாமூர்த்தி வாழைச்சேனை

கே: நாட்டிற்குத் தலைவராகவும், சமூகத்தொண்டராகவும் இருந்தவரை நாம் எவ்வாறு மதிக்கின்றோம்?

ப: முத்திரை அடித்து முகத்தில் சீல் குத்துகின்றோம்

★

க. பாலவடிவேல் ஏறாவூர்,

கே: இங்கிலாந்தில் எம்மவர்கள் அழுவது எப்போது? சிரிப்பது எப்போது?

ப: வடக்குக் கிழக்கில் வாழும் தாய் தந்தையரைக் கனவில் கண்டால் சிரிப்பர் வீதியோரம் நீக்ரோவைக் கண்டால் அழுவர்.

★

ச. அன்புராஜ் கல்லடி

கே: மனிதனுக்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம்?

ப: மிருகம் இரைமீட்கும்; மனிதன் கோபத்தை மீட்பான்

★

வ. தங்கராசா இருதயபுரம்

கே: கடவுளின் பாதத்தை எங்கே வைக்க வேண்டும்;

ப: கூட்டுறவுக் கடைத் தராசின் நடு நெம்புகோலில் வைக்க வேண்டும்.

★

கே; எங்களுக்குத் தெரிந்தது எது? தெரியாதது எது?

ப: நூறு வருடங்கள் வாழப் போகிறோம் என நினைத்து 4 தலை முறைக்குப் பொருள் சேர்க்க எமக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் சுடலையை நோக்கிச் செல்கின்றோம் என்பது எமக்கு புரியாத ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே: அகதி முகாமைப் பார்த்தால் உமக்குத் தெரிவது என்ன?

ப: அவர்கள் 'வோட்' உள்ள அகதிகள் எனத் தெரிந்து கொண்டேன்.

★

கே: தொழிலாளிக்கும்' அறிவாளிக்கும் என்ன வித்தியாசம்?

ப: தொழிலாளி கைகட்டி வாழ்க்கை நடாத்துகின்றான். அறிவாளியே 'ரை' கட்டி முரண்பாட்டை வளர்க்கின்றான். ★



அ. செந்தூர்ராசா வவுறணி

கே: அண்ணா ஒரு விரல் காட்டியது ஏன்? எம். ஜி. ஆர். இரண்டு விரல் காட்டியது ஏன்?

ப: நான் இருக்கும் மட்டும் தி. மு. க. ஒரு கட்சி என அண்ணா ஒரு விரல் காட்டினார். நான் கட்சியை இரண்டாகப் பிளந்து விட்டதாக எம். ஜி. ஆர். இரண்டு விரல் காட்டினார் போலும்!

ஆ. ராஜா கல்முனை

கே. கருடா ...... உனக்குச் சோதிடம் கொஞ்சம் தெரியுமாமே .. ... நான் கல்யாணம் செய்யப் போகிறேன். ஏதும் அறிவுரை சொல்வாயோ?

ப: அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஒற்றுமையாக வாழ்வதில்லை. அடுத்த வீடு போல் ஒட்டிக் கிடக்கும் இராசியைச் சேர்ந்த பெண்ணும் உன்னுடன் ஒற்றுமையாக வாழ மாட்டாள். கன்னியைக் கையில் பிடிக்குமுன்பு நல்ல ராசியைப் பிடி.

ச. அருந்தவபூபதி ஆத்திமோட்டை திருமலை

கே: அன்பளிப்பு என்பதை வைத்து அர்த்த புஷ்டியாக ஒரு வசனம் சொல்ல முடியுமா?

ப: வருமானத்தை எதிர்நோக்கித் தன்மானத்தை விற்போர் அடிக்கடி அன்பளிப்புக்களை எதிர்பார்ப்பர்.

★

கா. கதிர்காமவேல் ஆரையம்பதி

கே: பள்ளிவாசலுக்கு கோயிலுக்கும் என்ன வித்தியாசம்?

ப: பள்ளிவாசலில் ஆறுகால வழிபாட்டுடன் தங்கும் வசதியும் உண்டு கோயிலில் மூன்று வேளைப் பூசையுடன் ,கேற் லொக் அப்!

★

ஆ. தங்கவடிவேல் கொழும்பு 02

கே: பெரும்பான்மை மக்களைச் சுற்றிப் படரும் கொடிகள் சிறுபான்மையினர் என அதி உத்தம ஜனாதிபதி பேசியுள்ளார். இது சம்பந்தமாக என்ன நினைத்தீர்?

ப: பெரும்பான்மைச் சிங்களச் சகோதரர்கள் போகும் போது தோளில் ஏறிக் குந்தியிருக்க வேண்டும் என யோசித்தேன். ஹா ......... ஹி

★

க. வில்வராஜ் பெரியகல்லாறு

கே: இலங்கை வானொலியின் நற்சிந்தனைகள் பற்றி என்ன நினைக்கின்றீர்?

ப: இஸ்லாம், கிறிஸ்தவம், சைவம் என நற்சிந்தனைகளை மூன்றாகப் பிரித்து ஒலிபரப்பி நாட்டை மூன்றாகக் காலையிலேயே பிரித்து விடுகின்றார்கள். நற்சிந்தனை ஒன்று தான் என்பதை அவர்கள் உணர்வதில்லையே!

★

க. அன்பழகி பெரியநீலாவணை

கே: ஒரு ஆசிரியர் ... என் மீது அடிக்கடி ஒரு மாதிரியாகப் படிப்பிக்கின்றார் ...... என்ன செய்வது?

ப: வேறு விதமாகப் படிப்பித்தால் அன்றித் திருந்த மாட்டார் என நினைப்பின், பாடசாலைக்கு வெளியே வழியில்லாமலா போகும்' நேரடி நடவடிக்கை அவசியம்.

செல்வி. றியானா இக்கிலிகொல்லாவை

க: கருடா உன்னைத் திருடா எனக் கூப்பிட்டால் கோபிப்பாயா?

ப: நான் பறப்பதே திருடத்தானே ... கோவித்து என்ன பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டு மாங்காயும் பிரம்படியும்

"விபுலானந்ததாசன்"

அப்போது கல்லடி உப்போடை விவேகானந்தா வித்தியாலய மாணவன் நான். பாடசாலைப்பருவம் மாங்காய் சாப்பிடுவதில் தனி ஆசை பிரம்படியைக் கூட பெரிது படுத்தாத மாணவப் பருவம். இடை வேளை மணியடித்ததும் ஆலய வாசலில் நிற்கும் ஒட்டு மாமரத்தடியில் நாம் ஓடிச் செல்வோம். எங்களில் சிலர் மாமரத்திலேறி மாங்காய் பறிப்பர். பின் எல்லோரும் பகுந்துண்டபின் வாயில் மாங்காய் மணம் தெரியாதிருக்க மரமுந்திரிய இலையைக் கசக்கி வாயில் தேய்த்துக் கொள்வது எமது அன்றாட வழக்கம்.

அன்று வழமை போல மாமரத்தடியில் ஓடிச் சென்றோம். மரத்திலேற மறுத்த மாணவத் தோழர்கள் கல்லால் எறிந்து மாங்காய் பிடுங்க முற்பட்டனர். எங்கள் துர்அதிஷ்டம் காரணமாக ஒரு மாணவன் எறிந்தகல் அயல்வீட்டில் எண்ணெய் உருக்கிக்கொள்ள தேங்காய்ப் பூ அவித்த சட்டி மீது போய் விழுந்தது. கல் விழுந்த வேகத்தில் சட்டியின் ஒருபாகம் உடைந்து விட்டது. அந்த வீட்டுக்காரி பொல்லாதவள். எடுத்த தற்கெல்லாம் பாடசாலை மாணவர்களையே குற்றம் சாட்டுபவள். சட்டி உடைந்த சம்பவம் மனுசியை உலுப்பி விட்டது. கேட்கவும் வேண்டுமா? கால் சிலம்பைக் கையிலேந்தி நீதி கேட்க வந்த கண்ணகி போல உடைந்த சட்டித் துண்டுடன் நீதி கேட்க தலைமை ஆசிரியரிடம் வந்து விட்டாள், விஷயம றிந்த நமக்கெல்லாம் உள்நடுக்கம் ஆரம்பமாகிவிட்டது பக்கத்திலுள்ள சித்தி விநாயகரையும், பேச்சியம்ம னையும் பலமுறை வேண்டிக் கொண்டோம்.

இடைவேளை முடிந்து வகுப்பறை சென்றதும் வரிசையாக நிறுத்தப்பட்டோம். மாணவர் தலைவன் வழக்கம் போல அறையினுள் சாத்திவைக்கப்பட்டிருந்த பிரம்பை எடுத்து வந்ததலைமை ஆசிரியரிடம் கொடுத் தான். மனுஷி தன் முறைப்பாட்டை தனக்கே உரித் தானகொம்பலுடனும்கூக்குரலுடனும் முறையிட்டான் விசாரணை ஆரம்பமானது தலைமை ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். குற்றவாளியை மிகவும் இலகுவில் கண்டு பிடித்து விட்டார். பின் கேட்கவும் வேண்டுமா? சகலருக்கும் பிரப்பம்பழம் கிடைத்தது. அத்தோடு நின்று விடவில்லை உடைந்த சட்டிக்குப் பதிலாய்ப் புதுச்சட்டி வாங்கிக் கொடுக்க வேண்டியும் வந்து விட்டது. அன்று முதல் கல்வீசும் பழக்கம் எங்களை விட்டு மறைந் தொழிந்தது.

## இரிக் கெட் சாம்பியன்

மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய 35 ஓவர் தோல்ப்பந்து கிரிக்கற் போட்டியில் மாவட்ட சம்பியனாக சிவாநந்தா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று 10,000/= பெறுமதியான விளையாட்டு பொருட்களை பரிசாக பெற்றுக் கொண்டது.

- திருவருள் -

# இரா. தவராஜாவின்

( 11 ம் பக்கத் தொடர்ச்சிகள் )

## மனிதப் பிறவி எனக்கு வேண்டாம்

மனிதனுக்கு மனிதன்
குண்டு வைப்பானென்று
மனிதனை மனிதன்
சோதித்து
இங்கே
மனிதத்தை
தேடுகின்றான்

★ ★ ★

சிட்டுக் குருவிகளுக்கு
''செக்கிங் பொயின்ட்''
இல்லவே இல்லை
அவை எப்போதும்
சுதந்திரமாகவே
சிறகு விரிக்கின்றன.

★ ★ ★

ஆடுகளுக்கு
''ஐடின்ரிகாட்'' கிடையாது
அவை
அறுபடுமட்டும்
இரையும் இலவசம்

★ ★ ★

கழுதைகளுக்கு
''றவுண்டப்'' இல்லை
அவைகளில்
முக மூடிகளுமில்லை

★ ★ ★

எந்த தாயும்
எந்த தாயையும்
சோதிப்பதில்லை
இவைகளினால்
ஆண்டவா
அடுத்தபிறவியிருந்தால்
எனக்கிந்த
மனிதப் பிறவி
வேண்டவே வேண்டாம்

- மட்டுநகர்
இரா. தவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இரண்டாவது சுவைத்திரள் இதழில் அழகான முடிவுப் போட்டி ஒன்றை அறிவித்து இருந்தோம். அந்த இதழில் முதலாவது பந்தியில்......... புள்ளிகள் போடப்பட்ட பகுதியில் நாம் நிற்பாட்டியிருந்தோம். அதனைப் பின்வருமாறு முடிக்கின்றார் தமிழ்ச்செல்வி...

## அழகான முடிவுப் போட்டி

பரிசு பெறும் கதை
செ. தமிழ்செல்வி ஆரையம்பதி

## "பாலையில் வெந்த பசுந்தளிர்"

**முன் கதைச் சுருக்கம்**

கலா கணக்கியலில் பட்டம் பெற்றவள். அவள் தனிப்பட்ட கம்பனி ஒன்றில் கணக்காளராகவேலைசெய்கின்றாள். அவளின் கணவனும் கணக்கியலில் பட்டம் பெற்றவர். இன்னொரு கம்பனியில் அவர் 'சாட்டர்ட்' எக்கவுண்டனாக வேலை செய்கின்றார். இவர்கட்கு ஒரு ஆண் குழந்தை உண்டு. தாயும் தந்தையும் வேலை செய்வதால் அந்த ஒன்பது மாதக் குழந்தை ஹரியை ஆயா அருந்ததியே கவனிப்பாள். ஒரு நாள் இருவரும் அலுவலகத்தில் இருந்து வந்தபோது குழந்தையையோ, ஆயாவையோ காணாது விக்கித்து நின்றனர்...

ஒவ்வொரு இடமாகத் தேடியும் அவர்களைக் காணாதபடியால் கவலையும் பீதியும் மேலிட சோர்ந்துபோய்ஒன்றும் செய்யத் தோன்றாது வீட்டில் உட்கார்ந்து பலவாறு யோசிக்கத் தொடங்கினர். திடீரென எழுந்த கலா ஓடிச் சென்று அலுமாரியிலிருந்த நகை, துணிமணிகள் என்பவற்றைச் சரிபார்த்தவள் தன் கணவனின் பக்கம் திரும்பி, 'எல்லாச் சாமான்களும் சரியாக இருக்குதுங்க. நான் நினைச்சன் ஒருவேள அருந்ததிதான் நகை, சாமான்களையும் எடுத்திட்டு குழந்தையையும்கொண்டு போயிருப்பாளெண்டு' என்றாள் அதைக் கேட்ட அவனது கணவன் ஒருவேளை நம்மிடமிருந்து பணம் பறிக்கும் நோக்குடன்யாராவது மகனைக் கடத்திச் சென்றிருப்பார்களோ? என்று தனது எண்ணத்தை வெளியிட்டான் இதைக் கேட்டுக் கலவரமடைந்த கலா, 'அப்போ பொலிசிக்கு அறிவிப்போமே' என்றாள். இல்லை... இல்லை... பிள்ளையைக் கடத்தினவன எப்படிப்பட்டவனோ ஒருவேளை பொலிசிக்கு அறிவித்தது அவனுக்குத் தெரிஞ்சிதெண்டால் பிறகு பிரச்தனை பெரிதாகி விடும் எப்படியும் கடத்தினவன் ரெலிபோன் பண்ணுவான், குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட பணத்தைக் கொண்டு வரச் சொல்லுவான் ம......பொறுத்திருந்து பார்ப்போம்!

---

## அதிரடி வீரர் சிறிகாந்த் ஓய்வு

இந்தியாவின் அதிரடி துடுப்பாட்ட வீரர் சிறிக்காந்த் கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் இவர் இந்திய அணியில்பதினொரு (11) வருடங்கள் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக திகழ்ந்தார். இவரது சிறந்த துடுப்பாட்ட மூலமாகவே இந்தியா ஒருநாள் சர்வதேசகிறிக்கெட் போட்டியில் பிரகாசிக்கத் தொடங்கியது. 1985 ம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்திய கிறிக்கெட் அணியில் மிகவேகமாக ரன்கள் பெற்றதனால் இலங்கை பத்திரிகைகள் இவரை அதிரடி வீரர் என பாராட்டினர் இவரது ஓய்வு இந்திய கிறிக்கெட் அணிக்கு பாரிய இழப்பாகும்.

S. மணிவண்ணன்
கச்சேரி - மட்டக்களப்பு

---



இலங்கை ஆச்சிரமம்

சீடன்:- குருவே ......... எமது ஆச்சிரமத்தின் நிலை, கதவு என்பன களவு போவது போலக் கனவுகண்டேன்

குரு:. சீடா ...... உது இனக்கலவரம் வருவதற்கான அறிகுறி உடனே ஆச்சிரமத்தை வேறு இடத்துக்கு மாற்றிவிடு.

சீடன்:- வெறிகுட்! குருவே!!

- நித்தியவல்லி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னங்கபார்க்கிறது நமக்கிருக்கிறது ஒரே குழந்தை அவனுக்கு ஏதாச்சும் ஒண்டு நடந்தா என்னால தாங்க ஏலாதுங்க கடத்தினவன் எவ்வளவு பணம் கேட்டாலும் பரவால்ல கொடுத்துடுவோம் எப்படியாவது நம்ம குழந்த ஒரு ஆபத்துமில்லாம நம்மட்ட வந்து சேரணுங்க, என்றவளது கண்ணீர் கண்ணை மறைத்தது.

''கலா கடத்தினவன் எப்படியோ இப்ப கொஞ்ச நேரத்துக்குள்ள ரெலிபோன் பண்ணுவான். கவலைப்படாதே! அவன் கேட்கிற பணத்தைக் கொடுப்போம்,, என்றவாறு ரெலிபோன் அருகில் சென்று உட்கார்ந்தான் கலாவின் கணவன்.

இருவரும் ரெலிபோன் செய்திக்காகக் காத்துக் கிடந்தனர். இதற்கிடையில் குழந்தையைக்காணவில்லை என்ற செய்தி கேட்ட அயலவர்கள் எல்லாம் துக்கம் விசாரிக்க அங்கு குழுமி விட்டனர். அவர்கள் பாட்டுக்கு ஒருவருக் கொருவர் ஒவ்வொரு யோசனையாகச் சொல்லிக் கொண்டிருந்தனர். அவைகளெல்லாம் கலா தம்பதியினரை ஆறுதல் படுத்த வில்லை! ஏற்கனவே பீதியோடு இருந்த அவர்களை மேலும் பயமுறுத்திக் கொண்டிருந்தன.


சிறு விளம்பரம்

இப்போது கலை இலக்கிய உலகில் மாபெரும் சாதனை செய்துவருகின்றது.

"தோழன்"

(கலை, இலக்கிய ஏடு)

விபரங்கள்:

ஆசிரியர் ,, நிந்தாதாசன்,,

23, நாயவல

மாவனல்ல.


## விகிதாசாரச் சோடி

இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி 04ம் திகதியன்று 67 இலங்கையரும் இலங்கையர் அல்லாதவரும் இலங்கை ஜனாதிபதி அவர்களால் கௌரவ விருந்துகள் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர் இவர்களில் இருவர் மாத்திரம்தான் தமிழர்கள்.

- செய்தி -

விகிதாசாரம் விகிதாசாரம் எண்டு கத்தி என்னபயன் கௌரவப்பட்டங்களில் கூட விகிதாசாரம் பேணவில்லையே!

அலுவலகப் பையன்

திடீரென்று கார் ஒன்று வாசலில் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. எல்லோரும் தங்கள் ஆராய்ச்சிகளை அத்துடன் நிறுத்தி வீட்டு வாசல் பக்கம் தங்கள் பார்வையைத் திருப்பினர். அங்கே ஆயா சாவகமாக 'டாக்ஸியிலிருந்து குழந்தையுடன் இறங்கி வந்தாள். கலா ஓடிச் சென்று குழந்தையை வாங்க மற்ற எல்லோரும் அருந்ததியைச் சூழ்ந்து கொண்டு ஆளுக்கொரு கேள்வியாகக் கேட்டு அவளைத் திக்குமுக்காடச் செய்தனர். இறுதியில், அருந்ததி குழந்தையுடன் பூங்கா விற்குச் சென்றதை அறிந்து, மேலும் அங்கு நடந்த நிகழ்ச்சிகள் சுவராசியமில்லாமல் போகவே அங்குகூடியிருந்தோர் அனைவரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர். கலா தம்பதியினர் தங்களின் அதிக கற்பனையை நினைத்துச் சிரிப்பதா? அழுவதா? என்று தெரியாமல் விழித்து நின்றனர்.

---

## இரா. தவராஜாவின்

(11 ம் பக்கத் தொடர்ச்சிகள்)

### தாய்ப்பால் வரப்பிரசாதம்

ஆண் கண்கள்
ஆசைக்கு
தீனி போட
ஒய்யாரத்
தொட்டிலமைத்து
அழகூட்டும்
அங்கமில்லை
உன்
மார்புகள்

★ ★ ★

பெற்றெடுத்த
சிங்காரக் குழந்தை
சத்துக் குறையற்று
மேதினியில்
கால் பதிக்க
வாய் பதிக்கும்
அமுத சுரபி
ஆண்டவன்
அருளிய
வரப்பிரசாசம்

★ ★ ★

அழகு குறையுமென
உன திருக் குழந்தைக்கு
பால் பருக்க
மறுதலிக்கும்
மாதாவே!
நாளை
உருக்குலையும்
இவ்வுடம்பு சத்தியம்
பருக்கு
தாய்ப்பால்
உருவாகட்டும்
முழுப்பலமுள்ள
நம் சமுதாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது விடிவதற்கு அறிகுறியாகச் சேவல்கள் ஒன்றுடனொன்று போட்டியிட்டுக் கூவிக்கொண்டிருந்தன. அருந்ததி பம்பரமாகச் சுழன்று தனது வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். கலாவை அவள் கணவர் அவசரப்படுத்தியவாறு காரில் ஏறினார். காரில் ஏறியவள் அருந்ததியைக் கூப்பிட்டு,

'அருந்ததி, நேற்று மாதிரி ஹரியத் தூக்கித்து அங்க இஞ்ச எண்டுபோகாத சரிதானே ம்... பிறகு நெஸ்ரம் கொடுத்துக் கொஞ்ச நேரம் செண்டபின் நேற்று வாங்கிவந்த மீனெண்ணையை மறக்காமக் கொடுத்திடு' என்றவாறு தலையை உள்ளெடுக்க கார் வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல் 'விர்' ரெனப் பறந்து சென்றது ஏதோ தோன்றிய வளாகக் கார் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்த அருந்ததி 'ம்' என்று பெருமூச்சொன்றை விட்டவள் குழந்தை ஹரியின் அழுகுரல் கேட்கவே உள்ளே விரைந்தாள்.

ஹரிஹரனுக்கு 9 வயது ஆகியது. மூன்றாம் வகுப்பில் கல்வி கற்கும் அந்தச் சிறுவனின் ஆசைகள், தேவைகள் என்பன அந்த வயதில் சாதாரண பிள்ளைகளுக்குக் கிடைப்பதை விட சற்று அதிகமாகவே அவனுக்கு கிடைத்தது. அவ்வளவு வசதிகள் இருந்தும் அந்தப் பிஞ்சுமனம் ஏதோ ஒன்றுக்காக ஏங்கி நின்றது. ஆம், தம் உழைப்பால் உயர்ந்து வசதிகளைக் கொடுத்த பெற்றோரால் அவன் மீது அன்பை பொழிய முடியவில்லை! காரணம் அவர்கள் இருவரும் வேலைக்குச் செல்வதால், தம் உள்ளக்கிடங்கில் அமிழ்ந்து கிடக்கும் அன்பை வெளிப்படுத்த அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை. சிறு வயதிலிருந்தே ஆயாவே உலகம் என்றிருந்த ஹரிஹரனுக்கு வயது கூடக்கூட அவனுடைய எண்ணங்களும் செயல்களும் மாறுபட்டன. ஒரு நாள் பாடசாலை சென்று வந்த ஹரிஹரன்


தேனினும் இனியான தெளிவான புடவைகள்
வானவில்லும் தோற்றுப்போகும் வர்ண நிறப் புடவைகள்
இரண்டாம் குறுக்குத் தெருவில் தெரிந்திட
வாரீர்! வாரீர்!!

அது மட்டுமா?

★ சேர்ட்டிங் ★ சூட்டிங்
★ ஆடைகள் ★ அணிகலன்கள்

யாவற்றுக்கும்

வண்ணச் சமுத்திரம்

**கொணி ரெக்ஸ்**

195, இரண்டாம் குறுக்குத் தெரு
கொழும்பு - 11
ரெலிபோன்: 438466
449896




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆயா, ஆயா, எனக்கு நீ சோறூட்ட வேணாம். எனக்கு அம்மாதான் ஊட்ட வேணும். என்னோட படிக்கிற என் பிரன்சுக் கெல்லாம் அவங்க அம்மாதான் சோறு ஊட்டுவாளாம். எனக்குப் பக்கத்துப் பெஞ்சில இருக்கிற ரமேசோட அம்மா அவனுக்குச் சோறு ஊட்டும்போது கத எல்லாம் சொல்லு வாளாம். எனக்கும் எங்க அம்மாதான் ஊட்ட வேணும்'' என்று அடம் பிடித்தான்.

''எங்க அம்மா வேலைக்குப் போயிருக் காவே, வர லேட்டாகுமே. ஹரி நல்ல பையன். சமத்தா நான் ஊட்டுகிறத சாப்பிட வேணும்'' என்றாள் அருந்ததி,

''அப்ப நீ கத சொல்லுவியா'' என்றான்.

''எனக்குக் கத எல்லாம் சொல்லத் தெரி யாடா கண்ணா'' என்று குழைந்து பேசிய வளிடம்,

''உனக்குக் கத தெரியாட்டி நீ எனக்கு ஊட்டவேணாம். அம்மாக்குக் கத தெரியும். அம்மா ஊட்டினாத்தான் சாப்பிடுவன். நீ போய் அம்மாவக் கூட்டிவா.,, என்று சாப்பி டாமலே இருந்து விட்டான் ஹரி. மற்றுமொரு நாள், ''அந்த பாபு என்ன வடிவாகக் கிராப் இழுத்திருக்கான். அவன் அம்மா இழுத்து விட்டதாம் எனக்கு நீயும் அப்படி இழுத்து விடு,, என்று கட்டளை போட்டான்.

''எனக்கு அந்த அழவெல்லாம் இழுக்கத் தெரியாது, என்றவளிடம், ''அப்ப அம்மாவக் கூட்டித்து வா அம்மா என்னடா அழகா இழுப் பாங்க' என்று அடம் பிடித்து'' இறுதியில் அருந்ததியிடம் அடிவாங்கி அழுதழுது பாட சாலை சென்றான். இவ்வாறு ஹரிஹர னுடைய விஷமத்தனங்கள் நாளா வட்டத்தில் அதிகரித்ததால் அருந்ததிக்கு அவன்மீது சலிப்பு ஏற்பட்டது. அவன் மீது சலிப்பு ஏற்பட்டது. அவனது விஷமத் தனங்கள் கூடும்நேரங்களில் அருந்ததியிடமிருந்து ஹரிஹரன் அடி வாங்கத் தவறவில்லை!

அன்று பாடசாலையிலிருந்து ''ஆயா' ஆயா'' என்று உரக்கச் சத்தமிட்டவாறு துள்ளிக் குதித்து ஓடிவந்த ஹரிஹரனின் மழலை முகத்தில் சந்தோஷம் கூத்தாடியது.

''என்னடா ஹரி'' என்றவாறு சமைய லறையிலிருந்து விரைவாக வந்தாள் அருந்ததி,

''ஆயா, நாளைக்கு எங்கட ஸ்கூல்ல பரிசளிப்பு விழா. எனக்கு நாலு பரிசு இருக்கு, பெற்றோரக் கூட்டி வரவேணுமாம் இந்தா பாரு, காட் தந்திருக்காங்க'' என்றவாறு பரிசளிப்புவிழா அழைப்பிதழை எடுத்துக் காட்டினான். அதைப் பார்த்ததும் ''ம் இதுக்குத்தான் இப்படிக் கூப்பிட்டியா? அங்க அடுப்பில பொரியல் தீயப்போகுது'' என்ற வாறே விரைந்தவளைப் பார்த்து.

''ம் உனக்கு ஒண்டுமே தெரியா. நான் அம்மா வந்தவுடனே காட்டுவன்.'' என்ற வாறு அழைப்பிதழை எடுத்துக்கொண்டு அவனின் பெற்றோரின் வருகைக்காகக் காத் திருந்தான். ஹரி! ''ஓவர்டைம்'' செய்துவிட்டு நேரஞ்சென்று களைப்போடு வந்தவர்களிடம் ஓடிப்போய் அழைப்பிதழைக் காட்டி மூச்சு விடாமல் முழுவதையும் கூறி முடித்தான் அவன். ''ஆ, வெரிகுட்'' என்ற அவன் தந்தை, ''நாளைக்கு எனக்கு நேரமில்ல ஹரி! அவசர மான வேல கிடக்கு. ஹரியை அம்மா கூட்டிக் கிட்டுப் போவாங்க. சரிதானே'' என்று சமாதானம் கூறினான். ஆனால் தாயோ ''இல்லைங்க நாளைக்கு எங்க கம்பனி மனேஜ ருடைய பொண்ணுக்குக் கல்யாணம். அதுக்குக் கட்டாயம் போகவேணும்'' என்றாள் இதைக் கேட்டு மலர்ந்திருந்த ஹரிஹரனின் முகம்.

## புனர் ஜென்மம்

மௌனக் கூண்டை விட்டு
மந்த காசமாய் புறப்படும் - போது
''சுவைத்திரளின்'' பார்வைக் ...........
குயில்களும் சிரிப்பு மயில்களும் என்...
மனத்தோரண வாய்தனில்
வந்து வரவேற்பு கொடுக்க
கற்களாய் கிடக்கும் - என்
இதமான சொற்கள் யாவும்
கவிதை வண்டாய்
புனர் ஜென்மம் தொடுத்து
சிறகடிக்கின்றது உமது
வரவை நோக்கி!

ஆக்கம்; எஸ். சபேசன் கோட்டைக்கல்லாறு - 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடியதைக் கண்டதும் ''ஹரி, சமத்துப் பையன்தானே, நாளைக்குக் ஹரிகூட ஆயா வருவாங்க. எங்களுக்கு நேரமில்லடா கண்ணு. முக்கியமான வேல எல்லாம் கிடக்கு சரிதானே என்றவாறு அவன் கன்னத்தில் தட்டிவிட்டுக் குளியலறைக்குச் சென்றாள். ஆனால் அவர்கள் கூறிய சமாதானம் எதுவும், ஹரியைச் சமாதானப்படுத்தவில்லை ஏமாற்றத்துடன் ஏதோ நினைத்தவனாக மேசை மீதிருந்த அந்த அழைப்பிதழை எடுத்து ஆத்திரத்துடன் கீழே வீசிவிட்டுச் சென்றான்.

அடுத்த நாள் பரிசளிப்பு விழாவின்போது பரிசுபெற்ற மாணவர்கள் எல்லாம் தாங்கள் பெற்ற பரிசுகளைப் பெருமிதத்துடன் தம் பெற்றோரிடம் கொடுக்கும் காட்சியை ஹரிஹரன் ஏக்கத்துடன் பார்த்து நின்றான். அவனது பரிசுகளை வெறுப்புடன் பார்த்தான். அந்த நிகழ்ச்சி அவன் பிஞ்சு உள்ளத்தில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியதால் அன்றிலிருந்து படிப்பு விளையாட்டு போட்டிகள். விழாக்கள் எல்லாவற்றிலுமே அவனது ஈடுபாடு குறைத்துக்கொண்டே சென்றது. காலங்கள் விரைந்தன. ஹரிஹரன் இப்போது 18 வயது வாலிபன். அவனது வயது கூடியது போலவே, அவனிடம் கெட்ட பழக்கங்களும் கூடியிருந்தன. ஆம், அன்பிற்கு ஏங்கிய ஹரிஹரன் தன் கெட்ட நண்பர்களின் சக வாசத்தால் ஆரம்பத்தில் சிகரெட், சினிமா என்று தொடங்கி இப்போது மது, போதை வஸ்த்துப் பாவிக்கும் அளவிற்கு உயர்ந்து விட்டான். ஆரம்பத்தில் இதைப் பெற்றோர் அவதானிக்கவில்லை, ஒருநாள் நேரங்கழித்து வீட்டிற்குத் தட்டுத்தடுமாறி வந்த ஹரிஹரனது நிலையைப் பார்த்ததுமே, அவனைப் பற்றி அருந்ததி சொன்னதெல்லாம் உண்மை என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். மது அருந்திவிட்டு தள்ளாடித் தள்ளாடி வந்த தன் மகனைப் பார்த்து அடக்க முடியாமல் அழுத கலா,


ஹரி நீ நல்லா இருக்க வேணும். கஷ்டம் எதுவுமே தெரியாம உன்ன வளர்க்க வேணும் எண்டுதானெப்பா நானும் வேலைக்குப் போனேன். பணம் இருந்தால் உனக்கு கஷ்டம் வராஎண்டுதானெப்பா நான் நினைச்சிருந்தன் ஆனா, அந்தப் பணமே உனக்குத் தீங்கா யிடுத்தே. இதுக்குத்தானா நான் ஓடியோடி உழைச்சன்'' என்று தனது ஆற்றாமையை வெளிப்படுத்தினாள்.

கலா இரவுச் சத்தம் அக்கம்பக்கமெல்லாம் கேக்கப் போகுது, சும்மா இரு, காலைல பார்ப்போம்'' என்று சமாதானப் படுத்தினான் அவள் கணவன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியாகியும் ஹரிஹரன் வீடு திரும்பவில்லை. இதுபற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்த அவனது பெற்றோருக்கு கவலையைப் பன்மடங்காக்கி அதிர்ச்சிக்குள்ளாக்கும் செய்தியொன்று 'ரெலிபோன்' மூலம் வந்தது. ஹரிஹரன் போதையோடு மோட்டார் சைக்கிளில் வரும் போது லொறியுடன் மோதி இறந்து விட்டான். என அந்த ரெலிபோன் செய்தி கூறியது. செய்தி கேட்டவுடன் மூர்ச்சையாகி வீழ்ந்தாள் கலா, மயக்கம் தெளிந்து எழுந்தவள் எதிரே ஹரிஹரனின் உடல் வைக்கப்பட்டு மாணவர்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தும் காட்சியை வைத்தகண் வாங்காமல் திக்பிரமை பிடித்தது போல் பார்த்துக்கொண்டிருந்தாள் திடீரென எல்லாரையும் அதிர்ச்சியாக்கும் வண்ணம் உரத்த சத்தத்தில் பயங்கரமாகச் சிரித்தாள் கலா!

''ஹரி என்னப் பார்த்துச் சிரிக்கிறான். அவன் பரிசு வாங்கறதப் பார்க்கக் கூப்புடுறான். நான் போப்புறன். என்ட ஹரி பரிசு வாங்கறதப் பார்க்கப் போப்புறன். என்றவாறு யாரும் எதிர்பார்க்காவண்ணம் தெருவில் இறங்கி ஓடத் தொடங்கினாள் கலா!

யாவும் கற்பனை



பாடும் காதலர்

காதலி: சிந்திக்கச் சிந்திக்க
சிறகடிப்பதென்ன
சின்ன மச்சான் உன்
சீதனக் கோரல்!

காதலன்: கண்ணே!
கண்டுக்க கண்டுக்க
காதலை மட்டும்!
காசுக்கு காதல்
இல்லையடி பெண்ணே!

காதலி; ! ! ! ?

கோட்டைமுனை - அமீர் - ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சவாரித்தம்பர் ஒரு விமர்சனக் கண்ணோட்டம்

## சவாரித்தம்பரின் பாத்திரப் பண்புகள்

''பாத்திரம் அறிந்து பிச்சை போடுக'' என்றனர் ஆன்றோர். இங்கே சான்றாண்மை கொண்டவனின் பாத்திரம்உயர்ந்து நிற்கின்றது. பாத்திரம் அஃறிணை வைத்திருப்போனின் பலத்தினால் அது மதிக்கப்படும். மற்றையோரின் பாத்திரங்கள் வெற்றுப் பாத்திரங்களே! பாத்திரப் பண்புகள் கலைஞன் சிருஷ்டியில் மிக முக்கியமானது. மனித உணர்வுகளைக் காட்டும் கண்ணாடியே இப்பாத்திரங்கள்.

(மாற்றான் மனைவியைக் கவர்ந்தவன் இராவணன், ஆனால் அவளின் துகிலை அவன் உரிந்திடவில்லை. சீதையின் மனமாற்றத்துக்கு அவன் காத்திருந்தான். போரில் தோற்ற போதும் சீதையை விடுவேனோ என்று பேசினானே தவிர, அவனை மானத்தோடு விடுவேனா என்று அவன் பேசியது இல்லை. வடமொழி இராமாயணமோ கம்பன் காட்டிய இராமாயணமோ அவனின் இப்பாத்திரப் பண்பை நன்கு சித்தரித்து உள்ளன. இராவணன் போரிலே தோற்று வீடு வந்தான். வாரணம் பொருத மார்பு வரையினை எடுத்த தோள், தாரணி மௌலித்து, சங்கரன் கொடுத்தவாள், வீரம் எல்லாவற்றையும் அவன் பறி கொடுத்தான். ஆனால் அதற்குப் பதில் இதை முடிக்கின்றேன். எனச் சீதையின் கற்பை அவன் சூறையிடவில்லை.

தர்பியை அழைத்தான்; போர்க்கோலம் பூணச் செய்தான், ஆனால் தம்பியோ அண்ணன் போல் இலலை,

''திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ என்றான். அதற்காக அறம் போதித்தான். ஆனால் யுத்தம் என்று ஒன்று வந்த போது உடன் பிறப்பிற்காக உயிரை விட்டான்.
இராவணன் அண்ணன்; அவன் தம்பி கும்பகர்ணன்.

மகாபாரதத்தில் துரியோதனன் அண்ணன் தம்பி துச்சாதனன்! சூதிலே பாண்டவர் திரௌபதியை இழந்தனர். திரௌபதையைச் சபைக்கு அழைத்துத் துகில் உரிய ஏவப்பட்டவன் துச்சாதனன். கும்பகர்ணனையும், துச்சாதனனையும் ஒரே தராசில் இட்டு மனிதப் பண்பு என்ற படியைப் போட்டால் கும்பகர்ணனின் நிறை மனமே பாரதத்தில் கூடி நிற்கும்.

இந்து மதத்தின் தத்துவக் கதைகளில் ஒன்று முருகனும். பிள்ளையாரும் ஒரு மாம்பழத்திற்காக உலகவலம் வந்தது! அம்மையப்பன் என்றாலும் உலகம் என்றாலும் ஒன்றென நம்பிய விநாயகன் போட்டிப் பொருளான மாம்பழத்தைப் பெற்றுக் கொண்டான்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனோ கோபித்துச் சென்றுவிட்டான். முருகனை ஒளவையார் சந்திக்கும் கட்டம் இலக்கிய அந்தஸ்த்துப் பெற்றுக் கொள்கின்றது.
அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையில் ஏற்பட்ட இந்த அடிதடிக்கு மூலவேர் நாரதர்!

கம்பராமாயணத்தில் இந்த இடம் கூனிக்குச் செல்கின்றது. கம்பர் ஒரு கூனியைப் படைத்து கம்பராமாயணத்தைச் சுவைப்படுத்தியுள்ளார். ஒரு மாம்பழத்துக்காக முருகன் மலைமீது குடியேறினார். ஆனால் நாடாள வழியின்றிக் காடேறிய போதும் பிரிவினைக்கு வழியில்லாது இராமர் நடந்து காட்டினார்.

என் தம்பியேன் பெற்ற செல்வம் தான் பெற்றதே என இராமர் கூறினார்.

நாடாள வேண்டும் எனக் கூறிய போதும் காடேக வேண்டும் என மொழிந்த போதும் சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையாக இராமர் இருந்ததாகக் கம்பர் பாடினார்.

முருகப் பெருமானை ஒளவையார் சந்தித்தார். காடேகிய இராமரைக் குகன் என்ற வேடன் சந்தித்தான். முருகன் ஒளவையாரைப் பாட்டி என்று திருவாய் மலர்ந்தார்.

இராமர் குகனைத் தம்பி என அழைத்தார். பாத்திரங்களின் பண்புகள் இங்குதான் கலைஞனால் வார்க்கப்படும்.

இராமனைக் காட்டுக்கு அனுப்பிய கூனியும் தாய் என்று அழைக்கப்பட்ட கைகேயியும் வள்ளுவன் சொன்ன இருமனப் பெண்டிர் என்ற நிலையை அடைந்து தாழ்ந்தனர்! இவ்வாறுதான் சில பாத்திரங்கள் உயர்ந்து நிற்கின்றன;பலதாழ்ந்து போகின்றன

இராவணன் போல் கும்பகர்ணன் இல்லை. துரியோதனன் போல் துச்சாதனன் உண்டு சீதைபோல் மாதவி இல்லை.

மாதவியின் குடி இழுக்கு சீதைக்கு இல்லை. ஆடல் குடியில் பிறந்தாலும் ஆன்றோர் ஒழுக்கு மாதவிக்கும் உண்டு.

நற்குடியில் பிறந்தாலும் நா அடக்கம் சீதைக்கு இல்லை.

சீதை தீக்குள் முழுகித் தன் கற்பை எடுத்துக் காட்டினாள்.

கண்ணகி தன் கற்பின் திறத்தால் தீயை வரவழைத்து நகரை அழித்தாள்.

பாத்திரங்கள் வித்தியாசமானவையாகாது விடில் இலக்கியத்தில் சுவை கிடையாது.

## சவாரித்தம்பரின் பாத்திரங்கள்


சவாரித்தம்பர் இலங்கையில் தமிழ் மக்களின் பிரதிநிதியாகச் செயல்பட்டார்.

அவரின் மிக முக்கிய உப பாத்திரங்கள் பல: சின்னக்குட்டியே கதையை நகர்த்தும் கதாநாயகன் அவர்களில் தண்ணிச்சாமியாக வந்து சமாளைப்பவர். 'விக்கிரி, சின்னாச்சியக்கை, பாறுபதி அக்கை, கூட்டாளி தம்பர், அரசியல்வாதிகள், தொழிலாளிகளின் உதிரத்தை உறிஞ்சும்பெயர்தெரியாதமுதலாளிகள், தீண்டாமையை வேரறுக்கப் படைக்கப்பட்ட நல்லான், கந்தன் எமது நாகரீகத்தை வேரறுப்பவர்களாகக்காட்டப்படும் மேட்டுக்குடித் தமிழ்ப் பெண்கள் பணத்திற்காகப் பல்லிளிக்கும் பெண்கள், ஆண்கள் இப்படிப் பலர் அவர்களில் சிலரைச் கார்ட்டூனில் காணலாம்,

இப்பசங்களில் இருப்பவைகளை விட நூற்றுக் கணக்கான மானிடப் பிறவிகளை அவர் இனம் காட்டியுள்ளார்.

(சக்கரவர்த்தி ரஜோகோபாலாச்சாரியர் எழுதிய வியாசர் விருந்தில் பல பாத்திரங்கள் உலாவுகின்றன. அவை அவரால் சிருஷ்டி செய்யப்படவில்லை. மகாபாரதத்தில் உள்ளவையே.ஆனால் அப்பாத்திரங்களை அவர் பண்புகளில் கையாண்ட விதம் அலாதியானது அதனால் அவரின் மறைவை யொட்டி எழுதப்பட்ட இரங்கல்களில் அவரின் பாத்திரங்கள் உருகி அழுவதாகக் கூறப்பட்டது.

(சவாரித்தம்பரின் பாத்திரங்கள் பழைய இதிகாசங்களில் இருந்து எடுக்கப்பட்டவை அல்ல. எம்மிடையே வாழும் மனிதர்களில் இருந்து கண்டு எடுக்கப்பட்டவை எமது கலாச்சாரத்தை, நாகரிகத்தை சுயநிர்ணய உரிமையை, அரசியலை, சனநாயகத்தை வேரறுப்போரையும் எமது முன்னேற்றத்துக்குத் தடையாகநிற்கும்பொறாமை அறியாமை தீண்டாமை என்பனவற்றையும் வேரறுக்கும் நோக்கமாக உருவாக்கப்பட்டவை இப்பெயர்களில் பல வாழ்து போன மனிதர்களின் பெயரில் இயங்கினாலும், நிழல் உருவத்தில் வாழும் இவர்கள் சொல்லும் புரட்சியை, முன்பு வாழ்ந்தவர்கள் செய்யவில்லை.



ஒருவர்: எனது பசு மாடுகள் இரண்டையும் காணவில்லை! எங்காவது கண்டீரா?

மற்றவர்: மட்டக்களப்புக் கச்சேரியில் மேயக் கண்டேன்

ஒருவர்:- ? ? ?

நித்தியவல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியனோடாவின்சி ஓர் ஓவியர். அவர் படைத்த ஓவியங்களில் கிறிஸ்துவின் கடைசி இராப்போசனம் முக்கியமானது. இயேசுவும் அவரின் 13 சீடர்களும் விருந்து உண்ணும் காட்சி அது. சில வெள்ளிக்காசுகட்காக அவரைக் காட்டிக் கொடுத்த சீடன் யூதாசின் முகத்திலே அப்படம் வேறுபாட்டை, மனக்கலக்கத்தைக் காட்டி நிற்கின்றது. அந்த ஓவிய இயங்கு நிலையைச் சிருஷ்டிப்பதற்கு அந்த ஓவியர் பட்ட கஷ்டங்கள் அவருக்கே தெரியும்! சவாரித்தம்பர் ஒரு பாத்திரத்தைச் சிருஷ்டி செய்யும் போது அப்பாத்திரத்தின் செயல்கள், உள்நோக்கம் கொண்டவை என்பதை அப்பாத்திரங்களின் முக இழையோட்டத்தால் சித்திரத்தில் காட்டுவார். கடைசியில் பிரதான பாத்திரம் மூலம் வார்த்தையில் வடித்துக் காட்டுவார்.

ஒரு பெண்ணிற்குஇருப்பதற்குச் 'சீட்' கொடுத்து விட்டு நிற்கும் ஒரு வாலிபர் இதற்கு ஈடாக மணவறையில் இடம் தேடுகின்றார் என ஒரு கார்ட்டூன் வெளிவந்தது' இவற்றைப் பாலியல் என்றும் எடுக்க முடியாது. நையாண்டி எனவும் ஒதுக்கி விடமுடியாது. அவரிடம் இருக்கும் ஒரு தத்துவ இழையோட்டமே இதற்குக் காரணம் பாம்பின் வாயிலே இருந்து தமயந்தியைக் காப்பாற்றும் வேடன் கடைசியில் அதற்கு ஈடாக அவளின் கற்பைக் கேட்டானாம்! அந்த இலக்கியச் சஞ்சரிப்பை விட மணவறையில் இடம் தேடும் இப்படலம் சற்று நாகரீகம் மிக்கது. சிந்தனையுடன் சிரிப்பையும் தூண்டுவது.

மொழி நடையில் கூடச் சவாரித்தம்பர் மாபெரும் புரட்சி செய்துள்ளார். சவாரித்தம்பரில் (1960 ம் ஆண்டு) கார்ட்டூன் ஒன்று வெளியானது. அதன் சுருக்கம் வருமாறு;-

1) கனகம்மாவுக்கு ஆம்பிளைப்பிள்ளை பிறந்து விட்டது என்று கதிராசி 3 நாளாகச் சாப்பிட வில்லையாம்.

- பொறாமை

2) நல்லான் தோளாலை சால்வை எடுக்கவில்லை என நல்லானுக்கு நல்ல தாக்கலான அடி கொடுத்தேன் - தீண்டாமை

3) கட்சி பற்றித் தெரியாமல் விதானையார்சொன்ன கட்சிக்கு வோட் போட்டேன்.

- அறியாமை

சவரித்தம்பர் கடைசியாகச் சொல்கின்றார் இந்த ஆமையளை மல்லாத்தாமல் எமக்கு என்ன மண்ணாங்கட்டி சனநாயகம்

மகாகவி இக்பால் சொன்னார்; ',தனி மனிதனதோதேசிய இனத்தினதோ அகத்தை வளர்க்கும் கலை சிறந்தது.'' இதற்கு எடுத்துக்காட்டானது சவாரித்தம்பர் கார்ட்டூன்கள்!

ஒரு தனி மனிதன் தனது வல்லமையை அரை நூற்றாண்டு காலம் செலுத்தி இவ்வாறு தமிழினத்தின் சிரிப்புக்காக வாழ்ந்தவர் என்றால் அது இமாலய சாதனையே.

மேல் நாட்டில் நடந்த ஒரு சம்பவம் இது. ஒரு வீட்டில் ஒரு கோழியும், நாயும் வாழ்ந்தன. கோழி கூவுவது போல அந்த நாய் கூவப் பழகியது' ரேடியோ நிலையத்தார் அதைக் கேள்விப்பட்டு ஒலிப்பதிவு நாடாக்களுடன் சென்றனர். இரவு 4½ மணியளவில் வீட்டுக் கோழி கூவிபது அதைத் தொடர்ந்து அந்த நாயும் கோழி போல் கூவியது. அதை ஒலிப்பதிவு நாடாவில் பதிந்து ரேடியோ நிலையத்தார ஒலிபரப்பிய போது ரசிகர்கள் அதை நம்ப மறுத்தார்கள் காரணம் இது ஒரு பம்மாத்தாக இருக்கும் என்பதுவே இந்த நிகழ்வு ரெலிவிஷனில் காட்டப்பட்டிருந்தால் ரசிகர்கள் காதால் கேட்பதைக் கண்ணால் பார்த்திருக்க முடியும் சவாத்தம்பா வார்த்தைகளால் சொன்னதைக் கலைவடிவில் கீறிக்காட்டினார். அவை ரசிகர்களுடன் பேசுகின்றன . இவற்றை நூலுருவில் காட்டாது விட்டால் ஒருஅந்ததியினர்க்குநாம்செய்யும் துரோகமாகவே முடியும்.

(தொடரும்)

## மட்டக்களப்பு மேஜரும் சிரிப்பும்.


கம்பராமாயணத்தில் இராமர் இரண்டேதரம் சிரித்ததாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் மட்டக்களப்பு மேயராகப் பதவி ஏற்ற திரு.செழியன் பேரின்பநாயகம் அவர்கள் சிரிக்கப் பேசுவதில் சமர்த்தர். அவர் ஆண்டவனே இரண்டு தரம் மாத்திரம் சிரித்ததாகப் பேசியுள்ளார். (இந்தப்பூமியின் அதிகாரங்கள் எல்லாம் என்னுடையவை என்று சொல்லுபவர்களைப் பார்த்து ஒரு தடவை ஆண்டவன் சிரிப்பார். உனது சுகயீனத்தை நான் குணப்படுத்துவேன் எனச் சொல்லும் டாக்டரைப் பார்த்து இரண்டாம் தடவையாக ஆண்டவன் சிரிப்பார். இவ்வாறு பழைய கதையொன்றைச் சுவைபடச் செழியன் மேற்கோள் காட்டினார். இராமர் சிரிப்பைப் பார்த்தோம் ஆண்டவன் சிரிப்பைப்பார்த்தோம். மாநகரசபையை மாநகராட்சியிடம் கையளிக்காத அரசனைப் பார்த்து யார் சிரிப்பார்கள்? மேயர் பதில் சொல்வாரா மேயரின் பதிலைச் சுவைத்திரள் எதிர்பார்க்கின்றது பதில் கிடைத்தால் பிரசுரிப்போம்.

தினா வானா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேனா நண்பர் பகுதி



அன்பின் பேனா நண்பர்களே ........ உங்களின் புகைப்படம் இல்லாமல் பேனா நண்பர்கள் உங்கள் முகத்தைக் காணமுடியவில்லையாம்! அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என அவர்கள் சுவைத்திரளுக்குக் கடிதம் எழுதி வருகின்றார்கள். எனவே உங்கள் பேனா நண்பர் விண்ணப்பத்துடன். உங்கள் வயது, பொழுது போக்கு என்பன பற்றியும் விரிவாக எழுதி அனுப்பு மாறு வேண்டிக் கொள்கின்றோம். (ஆ+ ர்)

### இதோ புதிய பேனா நண்பர்கள்

பெயர்: வே. சுந்தரராஜன்
விலாசம்; 233, அன்புவழி புரம்
திருகோணமலை

பொழுதுபோக்கு; பத்திரிகை, எழுத்தாளர் தொடர்பு, கிரிகெட்

பெயர்: க. சுதர்சன்
விலாசம்: இல 179 B, கணபதி நகர்
செங்கலடி.

பொழுதுபோக்கு : பத்திரிகை. வானொலி மற்றும் வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: எம். மக்சூத்
விலாசம்: சேர்ராஸிக் பரீட் மாவத்தை
காத்தான்குடி

பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, சஞ்சிகைகள் படித்தல், ரீவி பார்த்தல், விளையாடுதல்




**ஹீரோயின்:-**

விளம்பர வசதி இருந்தும், விளம்பரப்படுத்த முடியாத பவுடர்.

**மிருகக்காட்சிசாலை;**

சட்டை போட்ட மனிதர்கள் சட்டை போடாத விலங்குகளைப் பார்வையிட இவ்விடம் வருவர்.

**குப்பைத்தொட்டி;**

தேசியக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் சப் - ஏஜன்சி

**கலண்டர்:-**

நாள் உதிரும் இடம்.

**சமாதான நீதவான் :-**

அகில இலங்கை ரீதியிலும், மாகாணரீதியிலும் பிரிக் கப்பட்ட நபர், ஸ்டாம்ப்

**கணவன்;-**

இருட்டிவிட்டால் தேடப்படும் நபர்.

**தவறணை**

காசுக்கு ஏற்றவாறு போதை இங்கு தரப்படுத்தப் படும்.

**பியானோ.**

தோட்டத்தொழில் தெரியாதோரின் அதிகாலை மண்வெட்டி.

**காதல்:-**

சங்கீதக் கதிரை.

**வேல்விழா:-**

கதிர்காமத்தில் வேல் கழற்றிய பின்பும் கொழும்பில் இந்த வேல் இழுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழைய தமிழ். எம்.பி. க்களின் செயலாளர்கள்**

கொழும்பில் 'றூம், வாடகைக்குத் தேவைப்படுவோர் இவர்களை அணுகலாம்.

**முகத்துவாரம்.-**


அலை ஒதுங்கலாம், அகதிகள் ஒதுங்கினால், ஏற்கப் படார்.

**டாக்டர்:-**

அரச ஆஸ்பத்திரியிலும், தனியார் ஆஸ்பத்திரியிலும் மாறி, மாறி ஊசி போடுபவர்.

**கொழும்பு பொதுசன நூலகம்.**

யாழ்ப்பாண நூலகத்தை ஞாபகப்படுத்தும் இன்றைய பெரிய நூலகம்.



## இப்படியும் நடந்தது
## - CANADA SPECIAL -

எனது நண்பன் கனடாவில் இருக்கிறான். அவன் எவருக்கும் கடிதம் எழுதுவது இல்லை. அவன் எனக்கு எழுதிய கடிதத்தில் ஒரு கால் மடக்கி விட்டே படுப்பதாக எழுதினான். மறு கடிதத்தில் முழுக்காலும் மடங்கி விட்டதாக எழுதினான். இதற்குக் காரணம் குளிர் என எழுதினான். பாவம் அவனுக்குப் பாரிசவாதம் என எண்ணி எனது அனுதாபத்தைத் தெரிவித்தேன்,

மறு கடிதத்தில் அவன் எழுதினான். குளிர் காரணமாக அவன் கால் போத்தல் பிரண்டி குடித்தானாம். குளிர் கூடக் கூட ஒரு போத்தல் பிரண்டி குடியாமல் நித்திரை வருவதில்லையாம்.

சே ......... அர்த்தம் தெரியாமல் தமிழைப் புரிந்து கொண்டதையிட்டு இப்போதும் மனவருத்தந்தான்.

நித்தியவல்லி

# மகாநதி பட விமர்சனம்

கல்லடி. நா, கிரிதரன்

பூர்ணம் விஸ்வநாத் ஆரம்பத்திலே கண்டு விட்டதாலோ என்னவோ அலட்டிக் கொள்ளாத யதார்த்தம். சிறைக்குள் ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டு நம்பிக்கையோடு இதை சொன்னயன்னா கூரையை பிச்சுண்டு தங்க காசா கொட்டுவா தெரியுமோ? என்னும் போது: முகத்தில் நம்பிக்கையின் கீறல்கள் யாரோ ஓர் உத்தியோக நண்பர் குடும்பத்தில் பிரவேசம் அன்னியோன்னிய உறவாடல் கதையை விட்டு தள்ளி விடுகின்றது. எனினும் கமலின் சின்ன மகளிற்கு தூக்கத்தில் கதைக்கும் பழக்கம் அடிக்கடி காட்டுகிறார்கள் பின் அச் சிறுமி கடத்தப்பட்டு வங்கத்துச் சதை மார்க்கட்டில் விற்கப்படுகின்றாள். அதை விஸ்வநாத்துடன் தேடியலைந்து அங்கிருப்பவர் கால் கைகளில் விழுந்து மீட்டு வருகின்றார் அவள் வங்காள மொழியில் தூக்கத்தில் கதைக்க ஐயோ என் பொண்ணை இப்படி பண்ணிட்டாங்களே என்று கதறும் கமல் நடிப்பு உலகின் சிகரமே.

சுகன்யாவின் வருகையால் கமலின் முகத்தில் ஜொள்ளு வெடிக்கிறது அத்தனை சோகத்திலும் எனக்காக காத்திருப்பாயா, என்றதும் எத்தனை வருஷமானாலும் உங்களுக்காக காத்திருப்பேன் என்றதும் அவ்விடத்தில் எதிர் பாராத முத்தக்காட்சி மனதை என்னமோ பண்ணுகிறதப்பா வில்லனாக வரும் கனிபா வித்தியாசமாக காட்ட முயன்று இருக்கின்றார். தவறி விழாமல் பிடித்து விட்டார். வசனங்கள் படு யதார்த்தம் மிகவும் நெருடலான விடயத்தை சாதாரணமாக சொல்லுகிறார் உதாரணமாக, நல்லவங்களுக்கு கிடைக்க வேண்டிய மாலை மரியாதை கெட்டவர்களுக்கு போய்சேர்கிறது அது எப்படி? என்னதான் அன்னியோன்னியமான மாமியாரானாலும் மருமகனின் முன் ஆடுவது என்றால் அங்கு சிறு தொய்வுஏற்படுகிறது.இரண்டு குழந்தைகளும் மிச்சம் நல்ல கரக்டர் அதிலும் பையன் தனது டைகரைப் பற்றி சிறையிலும் நலம் கூறும் படலம் தூள்.

பாடல்கள் ரொம்ப தூரம் கூட்டிப் போகா விடினும் சிறு இனிப்பு கலந்த பொங்கல் பேய் பூதம் பாடல் கமலின் முன்னய படம் ஒன்றை ஞாபகப் படுத்துகின்றது.

பெரிய கல்லாற்றில்......

**வீட்டு அத்திவாரத்துக்குப் போடக் கூடிய மாணிக்கக்கற்கள்:**
**நகைகளில் பதிக்கக்கூடிய அழகிய இலங்கை, இரத்தினக்கற்கள் யாவற்றுக்கும் நாடுங்கள்.**

ஆசிரியர் பேரானந்தம்
பெரியகல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிறுகதை)

# பானை போட்ட குட்டி

மட்டுநகர் - முத்தழகு

கோழி கூவித்தான் பொழுது விடியும் என்பது பழங்காலப் பழமொழி ஆனால்? எங்களது வீட்டில் என்ர மனை விளக்குக்கத்தித்தான் கோழி கூவுவது வழக்கம்.

இஞ்சாருங்கோ ............ ........''
மனிசி மத்தாளத்தை எடுத்து தன்ர இடுப்பில் கட்டி விட்டாள் நானி இனி ஆட வேண்டியது தான்.

திரும்பவும் அந்த .........

இஞ்சாருங்கோ ......... எழும்புங்களன் கோழியும் கூவப்போகுது'

நாலு சாமக் கோழிகளும் இப்ப ஒரு சாமமாகத் தான் கூவுவதாக ஒன்றிணைந்து தீர்மானித்து விட்டன போல அதுவும் என்ர மனிசி எழுந்து கூட்டு மாறு எடுத்து சலாம் வரிசை போட்டு அப்பிடி ... இப்படி போடும் தாள ஓசையிலே தான் கோழிகளும் கண்களை விழித்து கூவுவது இப்போது பழக்கமாகி விட்டது.

கோப்பியைக் கொண்டு வந்து தலைமாட்டில வைத்தவள். அங்க பாரும் ....... அந்த மனிசன்ர உத்தியோகமென்ன? படிப்பென்ன? இஃனும் மனிசி எழும்பல்ல மனிசன் எழும்பி கூட்டிப் பெருக்கி கோப்பி வைச்சி மனிசிக்கும் மல்லவா கொண்டு வந்து கொடுக்குது .........

அந்த இழுவையோட என்ர மனிசி என்னைப் பார்த்து என்ன சொன்னாள் தெரியுமோ

நீங்க என்னடா எண்டா கவட்டுக்க கையை வைச்சிற்றுப் படுக்கிறீங்க. எனக்கு வந்த அழலுக்கு நாகம் சீறின மாதிரி சீறி எழுந்த நான் அடியேய் ..! அடித்தொண்டை ாலஒருகத்துக்கத்தி நடுச்சாமத்தில ஒப்பாரி வைக்கிற பழக்கம் இன்னும் உன்னை விட்டுப் போகாதா? போ .. காது அது உங்கட பரம்பரைப் பழக்கம். அடியேய் அந்த உத்தியோகத்தர் ''டவறி'' அதாவது சீதனம் என்று பலலெட்சம் வேண்டினவர். இந்த மாதிரி வேலைக்கெல்லாம் வேண்டித்தாண்டி அவனுக்குப்பலலெட்சங்கள்கொடுத்து விலைக்கல்லவா வேண்டிப் போட்டாங்க. அடியேய் குண்டி கழுவச் சொன்னாலும் சழுவத்தான் வேணும். மாப்பிள்ளை என்றால் என்ன விளக்கம் தெரியுமா உனக்கு மா பிசைந்து பாண் பிட்டு இடியப்பம் செய்வது போலவே பிள்ளையை மா பிள்ளையை எப்படியெல்லாம் பிசை வாங்க தெரியுமா? அடியே நான் நிமிர்ந்து சொல்லுவேண்டி சொல்லவா?

வேண்டாம் .. வேண்டாம் வாய நல்லாக் கழுவிற்று கோப்பியைக் குடிங்க

என்ன ...? செட்டியாரும் எழும்பிற்ராரா ......! உன்ர சத்தம் கேட்டாப் போதுமே அக்கம் பக்கத்தில இருக்கிற குஞ்சி குருமானும் எழும்பி விடுமே!

இஞ்ச கேட்டிங்களா ஒரு விசயம். இஞ்சிக் கதை கதைக்காத தங் ப் பல்லுக் கட்டினவங்கதான் இஞ்சி கேட்டுக் கேட்டு பல்லைக் காட்டுவாங்க .. சரி சரி ... விசயத்தைச் சொல்லித் தொலை


## அசையாத கட்டிடங்கட்கு அத்திவாரமே முதல் பலம்!

உறுதியான வேலைகட்கு உறுதியான மூலப்பொருளே அடித்தளம்!

அந்தப் பொருட்களான பூட்டு, கூரைத்தகடுகள், இரும்புப் பொருட்கள், வீட்டுப் பாவனைக்கான பாவனைப் பொருட்களுக்கும், உறுதியான ''ஹீரோ'' பைசிக்கிள்களுக்கும் நாடுங்கள்.

## மெக்சல் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

[illegible]போன்: 065 - 4444
065 - 4566

118, பசார் வீதி,
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுக் காலையில செட்டியார்ர மனிசி என்னை முத்தம்மாக்கா ...... முத்தம்மாக்கா என்று கூப்பிட்டாங்க நான் என்ன தங்கச்சி கூப்பிட்ட என்று கேட்டுக் கொண்டே அவங்கிட வீட்டுக்குப் போறன் வாங்க அக்கா வாங்க என்று உபசரித்தாங்க பலகாரம் தேத்தண்ணி எல்லாம் தந்தாங்க குடிச்சி முடிந்ததும்

முத்தம்மாக்கா நான் உங்களைக் கூப்பிட்டது நவ ராத்திரிக்கொலுப் பொம்மை எல்லாம் வைச்ச நாங்க பக்கத்தில இருக்கின்ற உங்களுக்கும் காட்டத்தானே வேணும்? ! என்று சொல்லிப் போட்டு வீடெல்லாம் கொண்டு போய்க் காட்டினாங்க

ம்...முத்தம்மா ஒரு பெருமூச்சிவிட்டுக் கொண்டே கேட்டிங்களா ..... கேட்டிங்களா .....? அவட கழுத்தில கிடக்கிற தாலிக் கொடியோட கல்லட்டியல் செயின் வளையல் கல்மூக்குத்தி அப்பப்பா ஒரு நகை கடையே வைக்கலாம்.

என்று சொல்லி என்ரமனிசி விட்ட பெருமூச்சி ஒரு மினிப்புயல் அடிச்ச மாதிரித்தான் இருந்தது ! மீண்டும் விட்ட இடத்தில இருந்து தொடர்கின்ற போது...!

எவர்சில்வர் பாத்திரங்கள் என்ன? சர்வக் குடங்களென்ன? வெள்ளிப் பானைகளும் ஒரு அடுக்கு? என்ன ? வெள்ளிப் பானையா? ஓம் ஓம் .......? வெள்ளிப் பானைகள் இன்னது பெரியது என்று பல அடுக்கு!

முத்தம்மா அங்க பார் இளையவள் எழும்பி வாறாள் அவளைக் குழிப்பாட்டிப் பள்ளிக்கு அனுப்பி விடு

நானும் குழிச்சிற்று வாறன் என்ன இண்டைக்கு காலைக் கடையப்பம்.

பிள்ளைகளுக்குப் பாண் இருக்கு. சோத்துப் பானைக்குள்ள இரவு தண்ணி ஊற்றி வைச்சிருக்கிறன் தயிரும் கிடக்கு வெங்காயம் கொச்சிக்காயோட கடிச்சிக் கொண்டு சாப்பிடுங்க.

முத்தம்மா ........ ஓம் ... ஓம் ... எல்லாம் போட்டு மூடி வைச்சியிருக்கின்றன் போட்டுச் சாப்பிடுங்க-

முத்தம்மா கொஞ்சம் நில்லுஒருகதை சொல்லிறன் கேட்டுத்துப் போ பெண்களுக்கு தங்க நகையெண்டாலே ஒரு பயித்தியம். ஆனால் எல்லாப் பெண்களையும் நாம நினைக்கக் கூடாது இப் பத்தினிப் பெண்கள் இதில விதி விலக்கு காந்தியின் துணைவி கஸ்தூரிபாய் அவர்களுக்கும் இந்தவிடயத்தில கொஞ்சம் ஆசை இருந்ததுதான் காந்திஜீயின் தத்துவ உபதேசங்கள் அந்தத் தாயைக் கண் திறக்க வைத்த போதுதான் விழித்துக் கொண்டார்கள்.

கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியிடம் போனதும் கண்ணகை மாதவியைத் தனது சகோதரியாக நினைத்துக் கொண்டே தன்ர நகைகளையெல்லாம் மாதவியின் வீட்டுக்கே அனுப்பிமனநிறைவு கொண்டாளே அது தானே ''பதிபக்தி''


முத்தம்மா நீ சொன்ன பதிபக்தியை விட நாட்டுப் பத்தியை பற்றி ஒரு கதை கேள்விப்பட்ட நான் அதை சொல்லுறன் கேள்! அமெரிக்க நாட்டின் அழகிய நகரத்தை இரண்டு அழகிகள் சுற்றிப்பார்க்கின்றார்கள். அவர்களது நடை உடை பாவனைகளிலே சந்தேகப்பட்ட சி. ஐ. டி குற்றப்புலன் விசாரண அதிகாரிகள் அப்பெண்களைக் கைது செய்தனர்!

கூட்டு அம்பலமானது ! ? அவ்விருவரும் பெண் உடை தரித்த ஆண்கள் அவர்கள் ரஸ்சிய நாட்டு உளவாளிகள்-

முத்தம்மா ...... இதை ஏன் உனக்குச் சொல்லுறன் ஏண்டா பெண்கள் சொப்பிங் போனால் நகைக் கடை பிடவைக் கடைகளை ஒரு தடவை பார்க்கா விட்டால் அவங்கட தலையே வெடித்து விடும். பிடிபட்ட ரஸ்சிய உளவாளிகளை அமெரிக்க சி. ஐ. டி யினர் எப்படிப் பிடித்தனர்? பெண் உடை தரித்தாலும் மனம் ஆண் மனமாகத்தான் இருந்தது பெண் மனமாக இருந்தால் நகைக்கடை பிடவைக் கடை அமைந்திருக்கும் அவ்வீதிகளிலே பல தடவைகள் சுற்றிச் சுற்றி வந்தவர்கள் ஒரு தடவை யாகுதல் அக்கடைகளைத் திரும்பிப் பார்க்காமல் போனதே அவர்கள் பிடிபடக் காரணமாகவே அமைந்தது.

முத்தம்மா மகள் பள்ளிக் கூடத்துக்குப் போயிற்றாங்களா? ஓம் ஓம் செட்டியார் மகளோட போறாங்க.

முத்தம்மா என்ற பழய சம்பவத்தை உனக்கு சொல்லுறன் கேள்.



ஒருவர்:- கனடா போன அந்த வீட்டுக்காரன் எல்லாப் பொருட்களையும் விற்றுப் பணமாக்கினான்

மற்றவர்:- ''பின்பு'' ... ...

ஒருவர்:- ஒரு பொருளைத்தான் திரும்பி வந்த காலத்தில் திருப்பித் தருமாறு சொல்லி விட்டுப் போய் விட்டான்

மற்றவர்:- சொல்லு...... சொல்லு... அது என்ன?

ஒருவர்:- பிரிட்ஜ்''

ஹாஹா

நித்தியவல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பொலிசில பிடிபட்டு பல மாதங்கள் றிமாண்டில் இருந்தபோது பிணையுமில்லை. வழக்கு மில்லை. இந்த நிலையில் என்ர அம்மா என்னைப் பார்க்க வந்த போது எனக்குப் புதுச்சாறனும் சட்டையும் வேண்டி வந்தாங்க. என்ர அக்காவிக்கும் புது சீலையும் சட்டையும் வேண்டிக் கொண்டு இரண்டையும் ஒரு உமலுக்கப் போட்டுக் கொண்டு வந்தவங்க; என்னோடு இருந்து கதைச்சிப் போட்டு ஐம்பது ரூபாய் காசியையும் தந்து போட்டு அவட கண்கலங்க சாறன் சட்டைப் பார்சலையும் தந்து போட்டுப் போயிற்ராங்க. அம்மா போனப் பிறகு தான் சாறனைப் பாப்பம் எண்டு பார்த்தா? அக்காவுக்கு வேண்டின சீலையும் சட்டையும் ? அன்று இரவே நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டன், எனக்குச் ''கிப்பித்தலையன்'' என்ர பெயரும் ஆறேழு மாத மாகவே வெட்டுப்படாமலே ஆலம் விழுதாகவே வளர்ந்து கிடந்தது எனக்குச் சாதகமாகவே பழம் நழுவி பாலில் விழுந்து அது வாயில் விழுந்த மாதிரித் தான் -

காலையிலே றிமாண் கைதிகளெல்லாம் மவசலக் கூடம் என்றும் குழிப்பென்றும் அங்குமிங்கு ஓடியாடித் திரியும் நேரம்.

நல்ல சமயமடா இதை நழுவ விடுவாயோ மதிழ் ஏறிக்குதிச்சதும் மீன் கடைச் சந்தை அந்தக் கூட்டத் துக்குள்ளே கலந்து விட்டேன்.

ரவுணுக்க போக வேணும் தனியப்போனா அடையாள அட்டை கேப்பாங்க நாவிப்ப பெண்ணாகி நாணிக்கோணி நிற்கின்றன். சாமான்களோடு போனா அதை மட்டும் காட்டிற்றுப் போகலாம். சாமான்கள் வேணுமே? அந்தா கன்னங்குடா மாமி வாறாவு. மாமி மாமி குரலைக் கொஞ்சம் கம்மி யாக்கிக் கொண்டன். ஒண்டத் தாங்க மாமி சந்தி மட்டும் கொண்டு வாறன் எங்கபிள்ளை போக வந்த ஆசுபத் திரிக்கு வந்தநாங்க அம்மை பின்னால வாறாவு (சென்றி) சோதனை இடம்! எனக்கு அது தடை தாண்டி ஓட்டப் போட்டி! அதிலும் வெற்றிதான்!

மணிக்கூட்டுக் கோபுரம் அதன் பக்கத்தில் ''பெசன் ஹவுஸ்'' அவ்விடத்தில சாமான்களை வைத்து விட்டு மாமி மாமி! கொஞ்சம் நில்லுங்க அம்மைவந்ததும் போவம் என்று சொல்லிக்கொண்டே நான் நழுவி விட்டன்.

''குட்லன்ஸ்'' சந்தியில கொஞ்ச நேரம் நின்று அங்குமிங்கு பார்க்கின்றன் என்ன ஆச்சரியம்!? என் னத்தான் எல்லோரும் பார்க்கிறாங்களா? அல்லது என் நினைப்பா? பிரதான வீதியால மெதுவாக நடக்கின்றான். பள்ளி வாசல் பக்கமாக வந்து வாசிகசாலை முன்னால வந்த போது அங்கு நின்ற [illegible]ளிலேஇரண்டு பேர் என்னைக்கண்டு!

தொடரும்

அஞ்சலி

## அதிபர் திலகம்

## ஒறேற்றர் சுப்பிரமணியம்

இலங்கையின் வடக்கே, யாழ்பாணத்தின் வடக்கே சுன்னாகத்தின் மேற்கே தமிழ் மன்னர்களின் ராசதானியாக விளங்கிய கந்த ரோடையில் அறிவொளி பரப்பும் ஸ்கந்தவ ரோதக் கல்லூரி'' யின் முன்னாள் அதிபர் தான் இந்தஅதிபர் திலகம் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் ஆவார்.

இவரது தலைமையின் கீழ் இக் கல்லூரி இருந்த காலத்தில் 1948ம் ஆண்டு தொடக்கம் 1956 ம் ஆண்டு வரை நான் இக்கல்லூரியின் மாணவனாவேன் இந்த அதிபரின் கீழ் மாணவ னாக இருந்ததுஒரு பெரியபெருமையாகும். இக் காலத்தில் கலவன் பாடசாலையான இங்கே காதல் லீலைகளோ, கற்பு இழப்புக்களோ நிகழ்ந்ததில்லை. அவருக்குத் தெரியாத மாண வனும் இல்லை. பெற்றாரும் இல்லை. அவர் களது சகல சங்கதிகளையும் கொம்பியூற்றர் இல்லாத காலத்திலேயே துல்லியமாகத் தன் னகத்தே வைத்துக் காத்துக் கல்லூரியின் பெயருக்கு மெருகூட்டிய அரும் பெரும் அதி பராவார்.

இவரது காலத்துக்கு முன்னர் இவர் போல் இந்த அறிவாலயத்தின் நெறிகளை உணர்ந்து நிருவாகம் நடத்தியவர்கள் யாரும் இல்லை. அதேபோல் எதிர் காலத்திலும் இருப்பார்களோ நான் அறியேன்.

அவர்காட்டிய அன்புநெறி வழி வந்த மாணவர்களின் சார்பில் நானும் இந்த அஞ் சலியை அவரது பாதக் கமலத்தில் சமர்ப் பிக்கிறேன்.

- மட்டூர்ராம் -

எஸ். என் இராமநாதன்

முகாமையாளர்

வளர்மதி அச்சகம்

மட்டக்களப்பு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு மாத்திரம் அழகு அன்று!
அழகுக்கு அழகு தர ஆபரணம் தேவை!
22 கரட் தங்க நகைகளின் பெட்டகம்.

★ சங்கீதா ஜுவலரி ★

* இரத்தினக்கல் பதித்த நகைகள்
* சங்கிலி
* அட்டியல்
* கல்யாணமோதிரம்

அனைத்துக்கும் நாடவேண்டிய நகை மாளிகை

சங்கீதா ஜுவலரி
இல 17/1 முனை வீதி மட்டக்களப்பு
T.P 2196

மட்டக்களப்பு மூக்குக் கண்ணாடி ஸ்தாபனம்
(நடமாடும் சேவை)

நீங்கள் மூக்குக் கண்ணாடியைப் பெறப் பிற ஊர்போகத் தேவையில்லை. நிரந்தரம் இல்லாத விநியோகஸ்தர்களையும் நம்பாதீர். மட்டக்களப்பில் 15 வருடம் வேலை செய்யும் எமது ஸ்தாபனம் உங்கள் வசதி கருதி நடமாடும் சேவை ஒன்றினை நடாத்துகின்றது. இலவச கண்பரிசோதனையின் பின்பு 7 நாட்களில் மூக்குக் கண்ணாடியை நாம் வழங்குவோம்.

இடங்கள்

* கல்முனை வைத்தியசாலை. — பிரதி திங்கள்தோறும் 9.00-1.00
* மருதமுனை. — பிரதி திங்கள்தோறும் 2.00-4.00 மணிவரை
* கல்லாறு Y.M.C.A. — பிரதி திங்கள்தோறும் 4.00-5.00 மணிவரை
* வாழைச்சேனை 119A பஸ்நிலையம். — பிரதி ஞாயிற்றுக்கிழமை

நிரந்தர முகவரி 75B முனை வீதி, மட்டக்களப்பு.

வெள்ளவத்தை பார்மஸி என்பதே எங்கும் பேச்சு.
தரமான மருந்து வகைகளின் களஞ்சியம் இவர்கள்.

வெள்ளவத்தை பார்மஸி
220, காலிவீதி. வெள்ளவத்தை.
கொழும்பு 06.
ரெலிபோன் 583957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதை அணிந்திருந்த மோதிரம் அனுமானிடம் தூதுப்பொருள் ஆனது.

கண்ணகியின் காற்சிலம்பு காவியத்தில் இடம் பெற்றது.

**இது வரலாறு**

மட்டுநகரில் விதம் விதமான நகைகளை பலவாறு, உடனுக்குடன் செய்து தருபவர்கள்

# சுப்பிரமணியம் நகை மாளிகையினர்

**"இதுவும் ஒரு வரலாறு"**

நாளுக்கு நாள் நாகரீகம் மாறிடினும் இவர்கள் செய்த நகைகளை நாகரீக உலகம் நிராகரிக்க முடியாது.

★ தாலிக்கொடிகள் ★ கல்மோதிரங்கள் ★ அட்டியல்கள் ★ சங்கிலிகள்

இன்னும் எண்ணற்ற தங்க நகைகளை 22 கரட்டில் வடித்துத் தருபவர்கள்.

## சுப்பிரமணியம் நகை மாளிகை

22 யூடிஏ கட்டிடம் (லேடி மானிங் டிறைவ்)
மட்டக்களப்பு.
ரெலிபோன் 2682.

**நீங்களும் எங்களில் ஒருவரே!**

மட்டுநகரில் இருந்து கொழும்புக்கு வருகை தரும் உங்களை அன்புடன் வரவேற்று நிலா முற்றத்தில்

★ நிறைவான நினைவுகளுடன்
★ நிம்மதியாகத் தங்குவதற்கு
★ தலைநகரில் தரம் வாய்ந்த

தங்குமிட வசதிகளை உங்களுக்காகச் செய்துள்ளோம். இரவு நேரங்களில் தூர இடப் பேருந்துகள் புகையிரதங்களில் வருகை தரும் உங்களை எந்நேரமாயினும் அன்புடன் வரவேற்கிறோம்.

★ குறைவான கட்டணம்!
★ மனநிறைவான சேவை!
★ பாதுகாப்பான இடம்!
★ இதமான பராமரிப்பு!

**பின்வரும் முகவரிகளுக்கு விரையுங்கள்**

**"மாதினி இன்"**
583 3/1 மருதானை வீதி, மருதானை.
(மருதானை புகையிரத நிலையத்திற்கு அண்மையில்)

**"சாலினி இன்"**
8A, பூந்தோட்ட வீதி, கொழும்பு - 11
(கோட்டை புகையிரத நிலையத்திற்குப் பக்கத்தில்)

மட்டக்களப்பில் தொடர்பு கொள்க:—
60/1, பாரதி லேன்.
தாண்டவன் வெளி, மட்டக்களப்பு
திரு. சிவகுமார்
இ. போ. ச. உத்தியோகத்தர்
பேருந்துச்சாலை, மட்டக்களப்பு.



"கலைச்சந்திரன்" இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. இல R/B/N/ 4/3/89 இச்சஞ்சிகை 481, பார் றோட் மட்டக்களப்பில் வசிக்கும் திக்கவயல் சிதம்பரகுலசிங்கம் அவர்களுக்காக மட்டக்களப்பு வள்ளுவர் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஓவியர் ஸ்ரீகோவிந்த். வெளி அட்டை லங்கா பப்ளிஸிங் ஹவுஸினால் அச்சடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org